Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு + II விலை ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ்
பல், மூக்குக் கண்ணாடியகம்
பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.)
இல. 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 7893.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி - 11 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 13 (26.12.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:87

# அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் தமிழ் கூட்டமைப்பு!

## தீவிரமாக இறங்கவுள்ளதாக இரா. சம்பந்தன் தெரிவிப்பு!

(திருகோணமலை)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய அனைத்துத் தரப்பினரையும் சந்தித்து அவர்களையும், பொதுமக்களையும் ஓரணியில் திரட்டும் நடவடிக்கைகளில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஈடுபடவுள்ளதாக நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

எங்களைப் பொறுத்த வரையில் இடைக்கால நிர்வாக அமைப்பு அத்தியாவசியமான தாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கையை அரசு உறுதியுடன் கடைப்பிடிக்குமாம்!

### ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் தொடர்ந்தும் உறுதியுடன் கடைப்பிடிக்குமென ஜனாதிபதி சந்திரிகாவின் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அரசாங்கத்தினால் புதிதாக முன்வைக்கப்பட்ட திட்டத்தை நிராகரித்த மறுநாள் ஹரீம் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.-

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை விடுதலைப்புலிகள் நிராகரித்தமை தொடர்பாக அரசாங்கம் இதுவரை எவ்வித தகவலையும் பெறவில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டிற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத வகையில் அரசாங்கம் அதனை தொடர்ந்து பேணும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## போர்நிறுத்த உடன்பாட்டு நிலைமை

## தமிழ்ச்செல்வனுடன் ஆராய்வதற்கு ஹொவ்டே செவ்வாயன்று வருகிறார்!

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையின் தற்போதைய நிலைமை மற்றும் சிக்கல்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவதற்காக, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டே நாளைமறுதினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது போர்நிறுத்த உடன்படிக்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இதை அமுல் செய்வதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் குறித்தும் திருகோணமலைத் துறைமுகம் மற்றும் படையினரின் முகாம்களுக்கு அண்மையாக விடுதலைப் புலிகள் முகாம்கள் அமைத்திருப்பதாக படைத்தரப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புகுழுவுக்குச் சமர்ப்பித்திருக்கும் அறிக்கை போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப் படவிருப்பதாக கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை போர்நிறுத்த ஒப்பந்தத்தைக், கடைப்பிடிப்பது தொடர்பாக அரசாங்கம் சமர்ப்பித்துள்ள ஆலோசனை குறித்து அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடலொன்றை நடத்தியதாகவும் தெரியவருகிறது. (தே)

## புதிய நிகழ்ச்சி நிரல் குறித்து அரசு கலந்துரையாடவில்லை!

### ஜே.வி.பி. அதிருப்தி

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட புதிய நிகழ்ச்சி நிரல் குறித்து தமக்குத் தெரியப்படுத்தப்படாதது குறித்து ஜே.வி.பி கடும் விசனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பேச்சுக்களை மீள் ஆரம்பிப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஊடாக புதிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை புலிகளிடம் கையளித்திருந்தார்.

இந்தப்புதிய நிகழ்ச்சி நிரல் தொடர்பாக ஜே.வி.பி. அதிருப்தி வெளியிட்டிருக்கும் அதே வேளை, தம்முடன் கலந்துரையாடாமல் புலிகளுக்கு இந்த நிகழ்ச்சி நிரல் அனுப்பப்பட்டது குறித்து அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்று ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின்சில்வா கோரியுள்ளார்.

இது தொடர்பாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு ரில்வின் சில்வா தெரியப்படுத்தியிருப்பதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அரசாங்கம் சமர்ப்பித்த நிகழ்ச்சிநிரல் தமக்குத் திருப்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா தட்டுப்பாடு; பிறீமா நிறுவனத்தின் சதியே!

### ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு - பிறீமாநிறுவனத்தின் சதி நடவடிக்கையாலேயே ஏற்பட்டுள்ளதாக, வர்த்தக நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் கோதுமை மாவுக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனவரி முதல் வாரத்துக்கு முன்பாக வெளிநாடுகளில் இருந்து மாவை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது பிறீமா நிறுவனம் விற்பனை செய்யும் மாவுக்கு அரசாங்கம் மானியங்களை வழங்கிவருகின்றது. இதன்மூலம் கிலோ ஒன்றிற்கு 7 ரூபா பிறீமா நிறுவனத்திற்குக் கிடைத்து வருகிறது.

ஆனால், அடுத்த ஆண்டுமுதல் இறக்குமதி செய்யப்படவுள்ள மாவுக்கு அரசாங்கத்தால் மானியம் வழங்கப்படமாட்டாது. ஆனால், பிறீமா நிறுவனம் விற்பனை செய்யும் அதே விலைக்கு மாவினை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சி பிறீமா நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் காரணமாக தற்போதைய அரசாங்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. என்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்தார்.

## வத்திக்கான் தேவாலயத்தில் பாப்பரசர் நள்ளிரவு பிரார்த்தனை!



உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் போப்பாண்டவர் சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் நள்ளிரவு கிறிஸ்மஸ் பிரார்த்தனை நடத்தினார்.

யேசுகிறிஸ்து அவதரித்த தி[illegible]ான கிறிஸ்மஸ்தினம் நேற்று உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவர்களால் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமையிடமான இத்தாலியில் உள்ள வத்திக்கான் நகரில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு போப்பாண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பிரார்த்தனை நடத்தினார். சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் இந்தச் சிறப்பு பிரார்த்தனைக்கூட்டம் இடம்பெற்றது.

84 வயதுடைய போப்பாண்டவர் ஏற்கனவே உடல் நலக் குறைவு காரணமாக அவதிப்பட்டு வருகிறார். அதனால் அவர் சோர்வுடன் காணப்பட்டார். ஆனால் அவற்றைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கக் கோரி

# பருத்தித்துறையில் வீரசுதந்திர முழக்கம்!

## வடமராட்சி பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

(பருத்தித்துறை)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியும், மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுவருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறை நகரில் இடம்பெறவுள்ள வீரசுதந்திரமுழக்கத்துக்கு அணிதிரளுமாறு வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் பொது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வீரசுதந்திர முழக்கம் குறித்து வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்தினை நடைமுறைப்படுத்தாது அரசாங்கம் பின்னடித்து வருகிறது.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் அரசாங்கம் - விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பித்து விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கவேண்டும்.

தமிழ்மக்களின் ஒன்றுபட்ட குரலான - உரிமைக்குரலாக சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த ஒன்றுதிரண்டு வாருங்கள். வீரசுதந்திரம் முழங்குவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில் அறக்காவலர் சபையால் வருடந்தோறும் வழங்கப்பட்டுவரும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன் மாணவர் ஒருவருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குகிறார்.

## தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் நடத்தும் கண்காட்சியும் விற்பனையும்!

தியாகிகள் அறக்கொடை நிறுவனம் நடத்தும் தையல் கண்காட்சியும், விற்பனையும் அங்குரார்ப்பண வைபவம் நாளை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர் இ.சிவயோகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் யாழ்.மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்கொள்வார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கௌரவ விருந்தினராகவும், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி ஆர். இரத்தினராசா, சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரன் யாழ்மாவட்ட - பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.தேவா, யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், சமூக அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி என்.ஜெகதீசன், டிறிபேக் கல்லூரி அதிபர் மு.நாகேந்திரராஜா, ஓய்வுபெற்ற அதிபர் க.சந்திரசேகரா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ரெஜி சிறிவர்த்தனவின் அஞ்சலிக்கூட்டம்!

(யாழ்ப்பாணம்)

இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் கலை இலக்கிய விமர்சகரும், யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான ரெஜிசிறிவர்த்தனவின் அஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜெ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் - வணபிதா ஜெயசீலன், சோ.பத்மநாதன், சொ.சிவபாலன் ஆகியோர் அஞ்சலி உரைநிகழ்த்துவர்.

## சிறுவர் பாதுகாப்பு, பராமரிப்பு குறித்து சமூகசேவை திணைக்களம் ஆராய்வு!

(கோண்டாவில்)

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும், சிறுவர் நன்னடத்தைப் பிரிவும் இணைந்து சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பாக நல்லூர் செயலக அதிகாரிகளுடனும் கிராம அலுவலர்களுடனும் கலந்துரையாடல் நடத்தினர்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் -

சிறுவர் நன்னடத்தை அதிகாரி ரவி சந்திரன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.

சிறுவர் இல்லங்களில் வைத்து சிறுவர்களை பாதுகாத்து பராமரிப்பதைத்தவிர மாற்று வழிமுறைகள் பற்றி செயலக அதிகாரிகளுடன் அவர்கள் கலந்துரையாடினர்.

இனிவரும் நாள்களில் ஏனைய பிரதேச செயலகங்களிலும் சிறு[illegible] பாதுகாப்பு - பராமரிப்புத் தொ[illegible]பான கலந்துரையாடல்கள் நடைபெறும் என்று ரவி சந்திரன் தெரிவித்தார். (63)



புனரமைப்புப் பணி நடைபெற்றுவரும் வல்லைப் பாலத்தின் ஒரு பகுதி திருத்தவேலை முடிவடைந்து, இரும்புப் பாலம் பொருத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

## திருவாசகம் முற்றோதல்!

(சுதுமலை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு எதர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

## 18 மில்லியன் செலவில் குடாநாட்டில் அபிவிருத்திப் பணி கியூடெக் நிறுவனத்தால் பூர்த்தி!

பிரான்ஸ் கரித்தாஸ் அனுசரணையுடன் கியூடெக் நிறுவனத்தால் யாழ். குடாநாட்டில் பல அபிவிருத்தி, புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த எட்டு மாதகாலத்திற்குள் 18 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றதாக கியூடெக் நிறுவன இயக்குனர் சி.சீ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 180 வீடுகள் புனரமைக்கப்பட்டதுடன் 120 புதிய வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 20 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் 270 மீனவர்களுககு வழங்கப்பட்டுள்ளன. இவைதவிர மேசன், தச்சுத் தொழிலாளர்கள், சிகை அலங்கரிப்பாளர்களுக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்தப் புனரமைப்பு அபிவி[illegible]த்திப் பணிகளை பிரான்ஸ் - [illegible]தாஸ் நிறுவன அதிகாரிகள் முன்னின்று செயற்படுத்தினர் என இயக்குனர் மேலும் தெரிவித்தார். (91)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் பொலிஸாரால் கைது!

(கோண்டாவில்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டன.

உரும்பிராய் பகுதியிலும், நீர்வேலிப் பகுதியிலும் பாரிய கசிப்பு உற்பத்தி நடைபெற்றுவருவதாக அப்பகுதி மக்களால் கொடுக்கப்பட்ட தகவலையடுத்து பெருமளவு கசிப்புடன் உற்பத்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு தொலைபேசி மூலம் பொது மக்களால் கொடுக்கப்பட்ட இரகசியத் தகவலையடுத்து உரும்பிராய் மேற்கு சதா பேக்கரி வீதியில் 240 டிராம் கோடாவும், பெருமளவு கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணமும் மீட்கப்பட்டன.

இதையடுத்து மறுநாள் நீர்வேலி, பழைய கண்ணாடிக்கிளாஸ் தொழிற்சாலை வீதியில் 7 போத்தல் கசிப்பு மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டதுடன் உற்பத்தி செய்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். (82)

**A/I 2007 கலைப்பிரிவு**

**மாணவர் கவனத்திற்கு**

புதிய கல்வியை புதிய ஆண்டில சுபநேரத்தில் ஆரம்பிப்போம். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி முன்னணி ஆசரியர்களின் சேவை 1.1.2005 காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. விபரங்களுக்கு-

D.C.A மக்கள் வங்கி அருகில்

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

அமரர் செல்லையா மார்க்கண்டு

*(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்)*

அவர்கள் ஆண்டவனின் திருவடிக்கீழ் அமர்ந்து கொள்ளும் பேரின்பப் பெருவாழ்வுபெற இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்தம் இழப்பால் துயரடையும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சாந்தி சாந்தி சாந்தி*

*தும்பளை*

*பருத்தித்துறை*

ஆ.வடிவேலு

ஆ.மகேசு (அதிபர்)

(குடும்பம்)

(C-3526)

உ

நெய் அபிஷேகப் பிரியனே மணிகண்டா சரணம்.

**ஈழத்து சிதம்பரத்தில் இன்று பஞ்சரத பவனி**



"காரையம்பதி ஈழத்துச் சிதம்பரத்துக்கு ஒரு முறை வந்து பாருங்கள். அங்கே குடி கொண்டிருக்கும் மணிகண்டனிடம் நம்பி மனம்விட்டுப் பேசிப்பாருங்கள். தீராத வினைகள் எல்லாம் தீர்த்துவிடுவார். அடுத்தமுறை அவர் பாதம் சரணம் என்று வந்து விடுவீர்கள்."

அந்தப் பதியில் நம்பிச் சரண்புகுந்த நல்லவனைக் காப்பாற்றும் மணிகண்டன், பிள்ளையார் ,முருகன் நடேசர் , அம்மன், மாணிக்கவாசகர் ஆகியோர் ஆரோகணித்து பஞ்சரதம் ஏறி, இலங்கை – இந்திய நாதஸ்வர தவில் மேதைகள் கானமழை பொழிய, மக்கள் போடும் சரணகோசம் வானத்தைப் பிளக்க மக்கள் பக்தி வெள்ளத்தில் மிதந்து வந்து, அருள் மழை பொழியும் கண்கொள்ளாக் காட்சியைக் காணவாரீர்.



**ஆக்கம்: லயன் திரு.கனகசபை சுந்தரலிங்கம்**

**சமாதான நீதிவான் (காரை மணிகண்டன்)**

(சி/1003)

## தேர்தல் வன்செயல்களில் பாதிக்கப்பட்டோருக்கு
# 55 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்கப் பரிந்துரை

(கொழும்பு)

அரசியல் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நஷ்ட ஈடு வழங்குவது தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம், 2001, 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக 1506 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டன. இதன்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக 55 மில்லியன் ரூபா வழங்கப்படவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2001 மற்றும் 2004 நாடாளுமன்ற தேர்தல்களில் அரசியல் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஜனாதிபதி சந்திரிகா அதுபற்றி ஆராய்வதற்கு விசாரணைக்குழு ஒன்றை அமைத்திருந்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவில், சப்ரகமுவ ஆளுநர் சாலிய மத்யூ தலைமையில், முன்னாள் அரச அதிபர் எஸ்.எம்.ஆரியரட்ண, ஜனாதிபதி சட்டத்தரணி கே.ஏ.டி.சில்வா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

2001 தேர்தலின் பின்னர் தேர்தல வன்முறைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்துக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்ததோடு, அதற்கு மேலதிகமாக பத்திரிகைகள் மூலம் அறிவித்தல், வெளியிட்டு முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

2004 டிசெம்பர் வரை 1506 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு, அதன் இடைக்கால அறிக்கைகள் இவர் தலைமையில் ஜனாதிபதியிடம் ஒப்படைத்து இந்த வன்செயல்களின்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு 55 மில்லியன் ரூபாவுக்குக் கிட்டிய தொகை வழங்கப்படவேண்டும் என்று விசாரணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. மேலும் 1200 முறைப்பாடுகளின் விசாரணைகள் ஜனவரியில் ஆரம்பமாகி, மார்ச் 31 ஆம் திகதி குழுவின் இறுதி அறிக்கைகள் ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. (தே)

### சுதந்திர தேர்தல் ஆணைக்குழு
# நியமனங்கள் குறித்து ஆணையாளர் அதிருப்தி

சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள 5 உறுப்பினர்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு, அந்த நியமனம் தொடர்பாக விமர்சனம் செய்துள்ளார். கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான கருத்தரங்கொன்றில் உரையாற்றிய அவர் -

சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட எவருக்கும் தோதல் தொடர்பாக எவ்வித அனுபவமும் இல்லை. தேர்தல் பற்றிய செயற்திறன் மிக்கவர்கள் தான் இதற்கு நியமிக்கப்பட்டிருக்கவேண்டும்.

இப்படி அனுபவமற்றவர்கள் மூலம், சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கமாட்டாது. உள்நாட்டில் நீதிச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு என பல ஆணைக்குழுக்கள் உள்ளன. அந்தந்தத்துறையுடன் தொடர்புடையவர்கள் இதற்கு நியமிக்கப்படவேண்டுமென சட்டமும் கூறுகிறது. அரசியல் யாப்பும் கூறுகிறது. ஆனால், தேர்தல் ஆணைக்குழுவைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் முரண்பாடான வகையில் நியமனம் இடம் பெற்றுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இந்தக் கருத்துக்கள் அனைத்தும் தனது தனிப்பட்ட கருத்து எனத் தெரிவித்தார்.

# காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க முஸ்லிம்களின் அமைப்பு ஏற்பாடு

(கொழும்பு)

காணி உரிமைகள் தொடர்பான பொதுமக்களின் பிரச்சினைகள் இருப்பின், அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாணசபை உலக வங்கியின் உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் கீழ் மாவட்டம் தோறும் நியமிக்கப்பட்டுள்ள செயலணிக்குழுக்களின் மூலம் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் செயலணி- அரச காணிகளில் குடியிருந்த மற்றும் குடியிருப்பவர்களுக்குக் காணி சம்பந்தமான ஆவணம் இல்லாவிட்டால், அல்லது வழக்கப்பட்ட ஆவணம் தவறியிருப்பின், வேறு பிரச்சினைகள் இருப்பின் அவை தொடர்பாக உதவியளிக்கவுள்ளது.

எனவே இவ்வாறான பிரச்சினை உள்ளவர்கள் புத்தளம், தில்லையடி அநுராதபுரம், கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய இடங்களிலுள்ள வடக்கு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பின் பணிமனைகளில் தமக்கான விண்ணப்பங்களைப் பெற்று, அதனை உரியமுறையில் சமர்ப்பிக்கவேண்டுமென அமைப்பின் செயலர் சுபியான் மௌலவி கேட்டுள்ளார்.

## இடைக்கால நிர்வாக யோசனைப்படி
# பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்காது

### நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜயநாயக்க

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபை ஆலோசனையை அடிப்படையாக வைத்து, அரசு தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினால் அதற்குத் தமது கட்சியோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ ஆதரவளிக்கமாட்டார்கள் என, ஜே.வி.பியின் ஒன்றிய அமைப்பாளரும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பியசிறி விஜய நாயக்க தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை யோசனையே நாட்டின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வென்றால், அதுபற்றி எமது அரசியல்சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒத்துழைப்பை வழங்குவதற்கு முடியுமாக இருந்தாலும், சமாதானப் பேச்சுவார்த்தையின் பொருட்டாக இடைக்கால நிர்வாகசபை ஆலோசனையை அடிப்படையாகக் கொள்வதைத் எமது நாடாளுமன்றக் குழு ஏற்றுக்கொள்ளாது. அதற்குப் பதிலாகப் பலமான எதிர்ப்பைத் தெரிவிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 26 பேரும் தமிழகம் திரும்பினர்

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களில் 26 பேர் விடுவிக்கப்பட்டு, நேற்று முன்தினம் தமிழகம் திரும்பினர்.

விமானம்மூலம் சென்னை சென்ற 26 பேரையும் அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்ப, தமிழக அரசு ஏற்பாடுகளைச் செய்தது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை உடனே நிறுத்தவேண்டும் எனவும், கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும், தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச கால்நடைப் பண்ணையில் புலிகளின் பயிற்சி முகாமாம்!

## திருமலைப்பொலிஸார் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை உப்பு வெளிப் பிரதேசத்திலுள்ள அரசாங்க கால்நடைப் பண்ணையில் விடுதலைப்புலிகள் பயிற்சி முகாமொன்றை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கால்நடைப் பண்ணை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ளது. இங்கு புலிகளின் பயிற்சி முகாமொன்று உள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, உப்புவெளிப் பொலிஸார் அதனை கடந்த புதன் கிழமை சுற்றிவளைத்து, அங்கிருந்த விடுதலைப் புலிகளை கைது செய்ததுடன், அங்கிருந்த ஒரு தொகுதி புலிகளின் சீருடைகளையும் கைப்பற்றியுள்ளதாக திருமலையின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி உபாலி ஹேவகே தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இரகசியமான முறையில் 2002 ஆம் ஆண்டு முதல் அங்கு முகாமை நடத்தி வந்ததாகவும், அங்கிருந்தே தமது அமைப்புக்கு ஆட்களை இணைத்து வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க கட்டடத்தில் புலிகள் தமது முகாமை நடத்தி வந்தது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# விசா முழந்த வெளிநாட்டவர் வெளியேறுவதற்கு காலக்கெடு

(கொழும்பு)

விசா முடிவடைந்த பின்னர் இலங்கையில் தங்கியுள்ள அனைத்து வெளிநாட்டவர்களும் - அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளதாவது -

விசா முடிவடைந்த நிலையில் அடுத்த மாதம் பத்தாம் திகதிக்குப் பின்னர் தங்கியுள்ள அனைத்து வெளிநாட்டவர்களும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர். சுமார் பத்தாயிரம் வெளிநாட்டவர் விசா முடிவடைந்த நிலையில் தங்கியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறு விசா முடிவடைந்து தங்கியுள்ளவர்கள் உணவு விடுதிகளிலும், நகைக்கடைகளிலும் தொழில் புரிகின்றனர். இவர்கள் தற்காலிக விசாவுடன் வந்து இந்தத் தொழில்களைச் செய்கின்றனர். எனவே இவ்வாறு தற்காலிக விசாவுடன் வந்து தங்கியுள்ளவர்களைக் கண்டுபிடிக்குமாறு பொலிஸார் மற்றும் அதிகாரிகளுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் தற்காலிக விசாவை நீடிப்பது தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்தும் அவதானமாக இருக்குமாறும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (தே)

### ஊழல் மோசடிகளைத் தடுக்க
# கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யத் திட்டம்!

(கொழும்பு)

அரசாங்க அலுவலகங்களில் நிகழும் சில ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்காக, ஊழியர்களின் வருகையின் போதும், பணி முடிந்து வெளியேறும்போதும் அவர்களது கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்கள் கடமைக்கு வரும் போதும், கடமை நிறைவடைந்து செல்லும் போதும் அவர்களுக்குரிய பதிவுப் புத்தகத்தில் நேரத்தைப் பதிவு செய்யும்போதும் பலவித முறைகேடுகள் வெளியாகியுள்ளன.

இதைத் தடுக்கும் வகையிலேயே கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சில அரச திணைக்களங்களில் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்குப் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களைப் பாவனையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரமொன்றின் விலை ஒன்றரை லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# ஜனவரி முதலாம் திகதி தேசிய வீரர்கள் தினமாம்

### தேசப்பற்று தேசிய இயக்கம் பிரகடனம்

(கொழும்பு)

ஜனவரி மாதம் முதலாம் திகதியை தேசிய வீரர் தினமாக பிரகடனப்படுத்தியிருப்பதால், அன்றைய தினம் சகல வீடுகள், அரச அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் தேசியக் கொடியை பறக்க விடுமாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேட்டுள்ளது.

யாருக்கும் அடி பணியாத நாடு என்ற தொனிப் பொருளில் 2005 ஆம் ஆண்டை பிரகடனப்படுத்தியிருப்பதாகவும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு தேசிய நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு அந்த இயக்கத்தின் இணைத் தலைவர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஜனவரி ஐந்தாம் திகதி தேசிய வீரர் கொடித் தினமாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வருடத்தில் பாடசாலை, தேசிய மட்டத்தில் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இவற்றைவிட வெளிநாட்டவர்களின் ஆட்சியின் போது வீதிகள் மற்றும் பெருந்தெருக்களுக்கு சூட்டப்பட்ட ஆங்கிலப் பெயர்களுக்குப் பதிலாகச் சிங்களப் பெயர்கள் சூட்டப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# உள்நாட்டு விமான சேவை நிறுவனங்களை சர்வதேசத்துக்கு விஸ்தரிக்க அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு விமான நிலையங்களுக்கு இடையில் சேவைகளை மேற்கொண்டு வரும் மூன்று தனியார் நிறுவனங்கள் தமது சேவையை சர்வதேச அளவில் மேற்கொள்வதற்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது உள்நாட்டில் பயணிகள் விமான சேவைகளை மேற்கொண்டுவரும் லயன் எயார், எக்ஸ்போ ஏவியேசன், செரன்டிப் எக்ஸ்ப்ரஸ் ஆகிய நிறுவனங்களே இந்த வாய்ப்பைப் பெற்றுள்ளன.

இந்தியாவின் வர்த்தக மையங்களுக்கு தமது சேவையை முதலில் விஸ்தரிப்பதன் ஊடாக சர்வதேச பறப்புக்களுக்குள் தமது நிறுவனம் காலடி எடுத்துவைக்கப் போவதாக, எக்ஸ்போ ஏவியேஷன் நிறுவன அதிகாரி தெரிவித்தார். லயன் எயார் நிறுவனமும் இந்தியாவுக்கு முதலில் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளதாகக் கூறியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கான பறப்புக்களைத் தாம் மேற்கொள்ள விரும்புவதாக செரன்டிப் எக்ஸ்பிரஸ் நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

உள்நாட்டில் சேவைகளை மேற்கொள்ளும் இந்த விமான நிறுவனங்கள், சர்வதேச பறப்புக்களை மேற்கொள்ளும் போது பயணிகள் தாம் சென்று சேரவேண்டிய இடங்களுக்கு இணைப்பு விமான சேவை மூலம் இலகுவில் சென்றடையலாம் என்றும், அதேவேளை பயணக் கட்டணமும் குறைய வாய்ப்புள்ளதாகவும் விமான சேவை அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# தூஸ்ரா பந்துவீச்சு சர்ச்சைக்கு விரைவில் முடிவு காணவேண்டும்!

## கபில்தேவ் தெரிவிப்பு



(ஜலந்தர்)

பந்து எறியப்படுவதாக பொருள்படும் 'தூஸ்ரா' பந்துவீச்சுச் சர்ச்சைக்கு சர்வதேச கிரிக்கெட் சபை நிரந்தரத் தீர்வுகாண வேண்டுமென இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜலந்தரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பார்ம் டிராக் ஹொக்கிப் போட்டியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது -

ஒருவரது பந்துவீச்சுக் குறித்து சந்தேகம் எழும் பட்சத்தில் அதற்கு உடனடியாகவும், இறுதியாகவும் தீர்வுகாணவேண்டும். காலம் தாழ்த்தும் பட்சத்தில், அது அந்த வீரரின்மீது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை கிளப்பப்படும் சர்ச்சை தொடர்கதையாகவே இருக்கும்.

இம்மாதிரியான சர்ச்சைகள் தொடராவண்ணம் ஐசிசி செயற்பட்டால், அதற்குப் பாராட்டுத் தெரிவிக்கும் முதல் நபராக இருப்பேன். இந்தப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வுகாணும் பட்சத்திலேயே, கவலைகளை மறந்துவிட்டு ஆட்டத்தில் அந்த வீரர்களால் கவனம் செலுத்தமுடியும்.

ஹர்பஜனின் பந்துவீச்சுக் குறித்து சம்பந்தப்பட்ட அமைப்பினர் சந்தேகம் எழுப்புவதில் தவறேதுமில்லை. ஆனால், அந்த சர்ச்சை குறித்து அவருடைய நலன்கருதி விரைவில் தீர்வுகாணவேண்டுமென்பதே எனது கருத்து. எனது பந்துவீச்சுக் குறித்து சந்தேகம் எழுப்பினாலும் கவலைப்பட்டிருக்கமாட்டேன். எந்தப் பரிசோதனைக்கும் நானாகவே சென்றிருப்பேன். ஆசியக் கண்டத்தில் உள்ள வீரர்கள் அதிகமாக வளைந்து கொடுக்கும் தன்மையைப் பெற்றிருப்பதால் அம்மாதிரிப் பிரச்சினைகளுக்குள்ளாகிறார்கள். ஐரோப்பிய மற்றும் அவுஸ்ரேலியர்கள் அம்மாதிரியான தன்மையைக் கொண்டிருக்கமாட்டார்கள்.

ஹர்பஜனின் விடயத்தை ஊடகங்கள் ஊதிப் பெரிதாக்குவதற்குள் ஐசிசி விரைந்து முடிவு எடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

## இங்கிலாந்து – தென்னாபிரிக்க டெஸ்ட் இன்று ஆரம்பம்!

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் போட்டித் தொடரில் போர்ட் எலிசபெத் நகரில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. 2 ஆவது டெஸ்ட்போட்டி டேர்பன் நகரில் இன்று தொடங்கவுள்ளது.

இங்கிலாந்து அணி தொடர்ந்து 8 டெஸ்டில் வெற்றிபெற்றுள்ளது. இன்று தொடங்கும் டெஸ்டில் வெற்றி பெற்றால் 9 ஆவது வெற்றியாக இருக்கும். தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் மீண்டும் இடம்பெற்றுள்ளார். இதனால் அந்த அணியின் துடுப்பாட்டம் வலிமைபெறும். முதல் டெஸ்டில் தோற்றதால் அந்த அணி நெருக்கடியில் உள்ளது.

## அவுஸ்ரேலியாவே முதலிடத்தில்

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது. இதன்படி அவுஸ்ரேலியா 136 புள்ளிகள் பெற்று முதலிடத்திலும், இலங்கை 119 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்திலும், நியூஸிலாந்து 118 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்து 4 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 5 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் 6 ஆவதிடத்திலும், தென்னாபிரிக்கா 7 ஆவது இடத்திலும், இந்தியா 101 புள்ளிகள் பெற்று எட்டாவது இடத்திலும் உள்ளன.

# இலங்கை – நியூஸிலாந்து போட்டிகள் இன்று ஆரம்பம்



(வெலிங்டன்)

நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் செய்துள்ள இலங்கை அணிக்கும் - நியூஸிலாந்து அணிக்கும் இடையிலான ஒருநாள் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரின் முதல் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சொய்சா விளையாடவில்லை. பயிற்சி ஆட்டத்தின் போது இவர் காயமடைந்தார்.

இவரது விரலில் ஏற்பட்ட காயம் குணமாக சில நாட்களாகுமெனத் தெரியவருகிறது. இதனால் இவருக்குப் பதிலாக மாற்றுவீரராக மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க களம் இறங்குவார். இவர் நேற்று நியூஸி லாந்து பயணமானார்.

எனினும் நியூஸிலாந்தில் மழை பெய்து வருவதால் இந்த ஆட்டம் பாதிக்கப்பட வாய்ப்புக்கள் இருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

# மெல்பேர்ன் டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது!



அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகள் இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்பேர்ன் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ளது. முதல் டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி 491 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

இதனால் இந்த டெஸ்டில் வென்றால் அவுஸ்ரேலியா தொடரைக் கைப்பற்றும். அந்த அணியின் தொடக்க வீரர் லாங்கர் காயமடைந்துள்ளார். இதனால் அவர் ஆடுவது சந்தேகமாகும். இதனால் சைமன் கடிச்சுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

இரு அணி வீரர்கள் வருமாறு :

அவுஸ்ரேலியா: பொண்டிங் (கப்டன்), ஹைடன், லாங்கர், மார்ட்டின், லீமன், கிளார்க், கில்கிறிஸ்ட், வோர்ன், ஜிலெஸ்பி, மக்ரா, கஸ்பரோவிச், பிரெட்லீ.

பாகிஸ்தான்: இன்சமாம் (கப்டன்), யுகானா, யுனுஸ்கான், சொகைப் மலிக், இம்ரான் பர்ஹத், ஆசிம் கமால், சல்மான் பட், யஸிர் ஹமீத், அப்துல் ரசாக், சொகைப் அக்தர், அப்ரிடி, முகமது சமி, டனிஸ் கனேரியா, நவீட்-உல்-ஹசன், முகமது ஆசிப், முகமது கலீல்.

## விளையாட்டு

## மத்தியஸ்தர்களுக்கு 3 நாள் பயிற்சி முகாம்

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இன்று முதல் மூன்று தினங்கள் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கனேடிய தேசிய மத்தியஸ்தர்களான கணேஸ், பவளகாந்தன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் மத்தியஸ்தர்களுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

# இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று டாக்காவில் நடைபெறும்





இந்தியா-பங்களாதேஷ் அணிகள் இடையேயான 2ஆவது ஒருநாள் போட்டி டாக்காவில் இன்று பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இதற்காக இரு அணி வீரர்களும் டாக்காவில் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டனர். பலவீனமான பங்களாதேஷ் அணி டெஸ்ட் தொடரில் மோசமாக விளையாடியது. ஆனால் முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் கடுமையாகப் போராடியே தோல்வியடைந்தது. இதனால் இன்றைய ஆட்டத்தில் அந்த அணி வீரர்கள் சவால் கொடுக்கும் வகையில் ஆடலாம். என்றாலும், இந்திய அணி இன்றைய ஆட்டத்தில் வென்று தொடரைக் கைப்பற்ற வாய்ப்பு உள்ளது.

முதல் ஒருநாள் போட்டியில் இடம்பெறாத ஷேவாக், சகீர்கான் ஆகியோர் இன்றைய ஆட்டத்தில் இடம்பெறுவார்கள். தமிழக வீரர் ஸ்ரீராமுக்கு வாய்ப்புக்கிடைத்தும் அவர் அதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால் பந்து வீச்சில் முத்திரை பதித்தார். என்றாலும் அவர் நீக்கப்பட வாய்ப்பு உள்ளது. விக்கெட் கீப்பர் டோனிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படலாம்.





கட்டாரில் உள்ள டோகாவில் நடைபெற்ற 'அரேபிய கல்ப் உதை பந்துச் சம்பியன் ஷிப்' போட்டியில்பஹ்ரைன் 3-1 என்ற கோல் கணக்கில் குவைத் அணியை வீழ்த்தியது. பஹ்ரைன் வீரர் டேஜ் நாசர்(இடது) கோல் முயற்சியைத் தடுப்பதை இடது புறத்திலுள்ள படத்திலும், இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற கட்டார் அணிக்கான கிண்ணத்தை கட்டார் அமீர் ஷேக் ஹமாட் பின் கலிபா சுல்தானி வழங்குவதை வலது புறத்திலுள்ள படத்திலும்காணலாம்.



# உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க இளைஞர், யுவதிகள் முன்வரவேண்டும்

## தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன்

(வடமராட்சி)

மீண்டுமொரு கொடிய போரை எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட சிங்கள ஆட்சியாளர் திட்டமிட்டு வருகின்றனர். இந்தக் கடினமான காலகட்டத்தில், தேசத்தின் தேவையறிந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவும், தமிழர் படை பலத்தைப் பெருக்கவும் இளைஞர், யுவதிகள் முன்வரவேண்டும் என தென்மராட்சி கோட்ட அரசியற் பொறுப்பாளர் ஈஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சியில் இடம்பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் உரையாற்றும்போது, அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தனது உரையில்-

இன்றைய இளைஞர், யுவதிகளிடத்தில் சுதந்திரம் பற்றிய சிந்தனை பல்வேறு அபிப்பிராயங்களைத் தோற்றுவித்து இருப்பதுடன் எமது விடுதலைக்கும், போராட்டத்துக்கும் இவை மிகவும் அப்பாற்பட்டதாகவும் மாறியுள்ளது.

மாறுபட்ட வாழ்க்கை முறைக்குள் திசை திருப்பப்பட்டுள்ள இன்றைய இளைஞர்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பதுடன், இளைஞர் சமூகம் தனது தேசிய கடமையில் இருந்து தவறி, சினிமா மற்றும் போதை உலகில் தன்னை அழித்து வருவதுடன், எமது சமூக கலாசார விழுமியங்களையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

மீண்டும் கொடிய போரை எம் மீது கட்டவிழ்த்துவிட சிங்கள தேசமும் அதன் இராணுவ இயந்திரங்களும் திட்டமிட்டு வருகின்ற இந்தக் கடினமான கால கட்டத்தில், தேசத்தில் உண்மையான நிலையறிந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க மக்கள் முன்வரவேண்டும்.

நாம் வேல், வாள், கம்புடன் சண்டை போடுவதற்காக அல்ல, நவீன உலகின் மாற்றத்துக்கு ஏற்ப எம்மை நாம் தயார்படுத்த வேண்டியிருப்பதால், எமது படைபலத்தைப் பெருக்க அனைவரும் பகிரங்கமாக முன்வரவேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. இதை உணர்ந்து இளைஞர் சமுதாயம் மாறுபடவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (17)





அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியின்போது, அரியாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த.சிவலிங்கம் மங்களவிளக்கேற்றுவதையும், பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சித்தவைத்திய அதிகாரி கோ.தில்லைநாயகம், மற்றும் கிராமசேவகர் பு.தஜிதரன் ஆகியோர் மேடையில் நிற்பதை முதலாவது படத்திலும், பாலர்பாடசாலை மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். (55)

# வைத்தியசாலைக்குச் சென்ற சிறுவன் வீடு திரும்பவில்லையென முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தாயாருக்கு உணவு கொண்டு சென்ற சிறுவனைக் காணவில்லையென, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மற்றும் யாழ்.பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாயாருக்கு, உணவு கொடுக்கச் சென்றவரான- உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த யோகலிங்கம் பியூலன் (வயது-14) என்ற சிறுவனையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் தாயாருக்கு இந்தச் சிறுவன் உணவு கொண்டு செல்வது வழக்கம். சம்பவ தினத்தன்றும் மாலை 5 மணிக்கு தாயாருக்கு உணவு கொண்டு சென்ற சிறுவன் இதுவரை வீடு திரும்பவில்லை என சிறுவனின் உறவினர்கள் முறைப்பாட்டில் தெரிவித்தனர்.

# இந்தியா செல்லவுள்ளனர்

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்துக் கலந்துரையாடுவதற்காக யாழ். மீனவர் சமாசத்தின் சம்மேளனப் பிரதிநிதிகள் இந்தியா செல்ல வுள்ளனர்.

இந்தியக் கடற்தொழிலாளர் சங்கங்களின் அழைப்பின்பேரில் யாழ். கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் சம்மேளனப் பிரதிநிதிகள் எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் செல்லவுள்ளனர். (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நீதிமன்றம் செல்ல வாகன வசதி

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்யும்போது, அவர்களது நலன்கருதி நீதிமன்றம் செல்வதற்கான வாகனவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. இந்த ஏற்பாட்டை மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய மாகாண காணி ஆணையாளர் இ.இரவீந்திரன் சகல பிரதேச செயலங்களுக்கும் அறிவித்துள்ளார். (24)

## திருவாசக விழா

இந்து கலசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் திருவாசக விழா, நாளை மாலை 5 மணிக்கு கோப்பாய் சித்திரவேலாயுதர் சுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

இதில் "நானோ இதற்கு நாயகமே" எனும் பொருளில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். தொடர்ந்து கோப்பாய் சித்திரவேலா யுதர் சுவாமி கோயில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திருவாசகப் பண்ணிசையும் நடைபெறவுள்ளது.

## அரச அதிபருக்கு பாராட்டுவிழா

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து பல்வேறு பிரதேசங்களுக்கும் சிறப்புறச் சேவையாற்றிய செ.பத்மநாதனுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தால், எதிர்வரும் 28 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராட்டு விழாவொன்று நடத்தப்படவுள்ளது.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த இவர் வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (13)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

கமநல சேவைகள் திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்பட்ட நல்லின தென்னம் நாற்றுக்கள் திருநெல்வேலியிலுள்ள கமநல சேவைகள் விற்பனை நிலையத்தில் விநியோகிக்கப்படுகிறது.

இவற்றை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பெற்றுக்கொள்ளலாம் என பெரும்பாக உத்தியோகத்தர் பாமா தெரிவித்தார். (46)

## விபத்தில் இளைஞன் காயம்

மட்டுவில் பகுதியில் லாண் மாஸ்ரும - மோட்டார் சைக்கிளும் எதிரே மோதியதால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் காயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு மட்டுவில் கல்வயல் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது, மட்டுவில் பகுதியைச் சேர்ந்த நவரட்ணராஜா வசீகரன் (வயது 19) என்பவரே காயமடைந்தவராவர்.

## பொதுமண்டபங்கள் திறப்பு விழா

நியாப் திட்டத்தின் கீழ் வெகு துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்ட கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று பொதுமண்டபங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

துன்னாலை தெற்கு, இமையாணன், உடுப்பிட்டி தெற்கு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட மூன்று பொது மண்டபங்களும் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதனால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த மண்டபங்கள் அமைவதனூடாக அந்தப் பகுதி மக்கள் தமது பல்வேறுபட்ட பொதுத் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடியதாக அமையுமென்று பிரதேச செயலரும், அந்த ஊர் மக்களும் தெரிவித்தனர். (13)

# கைதடி அரச சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு திணைக்களத்தால் 25 ஆயிரம் ரூபா நன்கொடை

(தென்மராட்சி)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சமூக நலத்துறைத் திணைக்களத்தால், கைதடி அரச சிறுவர் இல்லத்தில் தங்கியிருக்கும் சிறுவர்களின் நலனுக்காக 25 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது.

சிறுவர்களின் நலனுக்காக பகிர்ந்தளிக்கும நிகழ்வு - இல்ல மண்டபத்தில் சிறுவர் நன்னடத்தை அதிகாரி எஸ். சிவகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டு இங்கு தங்கியிருக்கும் பதினைந்து சிறார்களின் பெயரிலும் தலா ஆயிரம் ரூபா வீதம், சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதற்கான சேமிப்புக் கணக்குப் புத்தகங்களைக் கையளித்தார்.

அத்துடன், பாடசாலை செல்லும் மாணவருக்கு உடுப்பு, சப்பாத்து ஆகிய பரிசில்களும் வழங்கப்பட்டன. (110)

# மீனவ சங்கங்களின் சமாசத்துக்கு 44 வெளியிணைப்பு இயந்திரங்கள்

## – உலக உணவு ஸ்தாபனம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

உணவு விவசாய ஸ்தாபனம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாலு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களுக்கு 44 வெளியிணைப்பு இயந்திரங்களை வழங்கவுள்ளது.

சமாசங்களுக்கு வழங்கப்படவிருககும் 9.9 குதிரை வலுக்கொண்டயமஹா வெளியிணைப்பு இயந்திரங்கள், அங்கத்துவ சங்கங்களின் பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் கடனாக வழங்கப்படவிருக்கிறது.

இந்த வெளியிணைப்பு இயந்திரங்களில் வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கு ஐந்தும் மற்றும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகிய மூன்றுக்கும் தலா பதின்மூன்று வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளதாகவும், இவ்வாரத்தில் வெளியிணைப்பு இயந்திரங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படுமெனவும் உணவு விவசாய ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (21)

# போதிய வசதிகள் இன்றி கரவெட்டி தபாலகம்

கரவெட்டி தபாலகம் பல்வேறுபட்ட வசதிக்குறைபாடுகளைக் கொண்டிருப்பதால், தமது தேவைகளை நிறைவுசெய்ய முடியாதிருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தத் தபாலகத்தில் வயோதிபருக்கான மாதாந்த உதவிப் பணத்தைப் பெறவருவோர் சீரான கட்டட வசதிகள், ஒழுங்கின்மை போன்றவற்றாலும், வாசலில் மழைத்தூறல் மத்தியில் நனைந்தவாறே தமது உதவுத் தொகைகளைப் பெற்றுச் செல்கின்றனர்.

தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கொண்டுவரும் ஆவணங்களும் நனைந்து விடுகின்றது.

இங்குள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்யுமாறு தபால் அதிகாரியிடம் மக்கள் கேட்டபோது, இந்தத் தபாலகக் கட்டடம் தனியாருக்குச் சொந்தமாகையால், இதனைச் சீர் செய்வதற்கு அரசு பண உதவிகள் செய்யமாட்டாது என்றும், இந்தத் தபாலகத்தை வேறு இடமொன்றும் மாற்றுவதற்கான கடிதங்கள் கொழும்பு ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அங்கிருந்து இன்னமும் இதனை மாற்றுவதற்கான அறிவித்தல்கள் எவையும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.(12)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : பா.தீபிகா
முகவரி : சுவிஸ்.

அகவை ஐந்து



பெயர் : அ.ஜெனிக்கா
முகவரி : வேலணை மேற்கு

# விளையாட்டு அரங்கம்



## நேற்று இன்று நாளை



ஜஸ்ரின் லாங்கர் ரண் களஞ்சியம்

இந்த வருடம் முடிவடையும் தறுவாயில் உலகின் சிறந்த கிரிக்கெட் அணி எதுவென்றால் தயக்கமே இல்லாமல் வரக்கூடிய பதில் அவுஸ்ரேலியா என்பது தான். இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏதாவது ஏற்ற இறக்கங்கள் அணியில் காணப்பட்டதா என்றால், நிச்சயமாக ஏறுமுகம் தான் என்பது புலப்படும். அதே வேளை ஒரு சில ஏற்ற இறக்கங்கள் அவுஸ்ரேலிய அணியில் இயல்பான விதமாகவே நடைபெற்று முடிந்திருக்கின்றன. இரண்டு பிரபல்யமான வீரர்கள் மார்க்வோ மற்றும் ஸ்ரீவ்வோ இருவரும் விடைபெற்றது இவ்வருடம் தான். ஸ்ரீவ்வோ இந்தியாவோடு தனது இறுதி டெஸ்ட் போட்டியை ஆடினார். ஆனால், இந்தியாவில் இந்தியாவைத் தோற்கடிக்கும் தனது கனவு நிறைவேறாமலே ஓய்வு பெற்றார்.

மைக்கல் கிளார்க் என்ற பெயரில் அவுஸ்ரேலியாவில் ஒரு நட்சத்திரம் தோற்றம் பெற்றதும் இவ்வருடம் தான். அதுவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தான் விளையாடிய முதல் டெஸ்ட் போட்டியிலேயே சதம் பெற்ற பெருமையையும் அவர் பெற்றுக் கொண்டார். இது ஒரு புறம் இருக்க அவுஸ்ரேலிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகிய மத்தியூ ஹைடனும் ஜஸ்ரின் லாங்கரும் உலகின் சிறந்த ஆரம்பத் துடுப்பாட்டச் சோடி என்ற பெயரைத் தக்க வைத்துக்கொண்ட வண்ணமே தம் தகைமையை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஜஸ்ரின் லாங்கர் தற்போது மைதானத்தினுள் நுழைந்தால் சதம் போடுவது சர்வசாதாரணம் என்றோரு நிலை இவ்வருட இறுதிக் காலப்பகுதி வரை உறுதிப்படுத்தியுள்ளார்.

உலகின் சிறந்த பந்து வீச்சுப் பலத்தைக் காட்டும் அணியாகத் தம்மை இவ்வருடம் நிரூபித்தவர்களும் அவுஸ்ரேலியர்கள் தான். அவர்களின் வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசை மிக நீண்டது. மைக்கல் கஸ்பரோவிச் தன் தகைமையை மீண்டும் எழுச்சியுடன் வெளிப்படுத்தவே, பிரெட்லீ அணியில் இடம் பிடிக்க முடியாத நிலை காணப்பட்டதும் இவ்வருடம் தான்.

ஸ்ரீவ்வோ ஓய்வு பெற, ரிக்கிபொண்டிங் தலைமைப் பொறுப்பை ஏற்ற அதே காலப் பகுதியில் கிளென் மக்ரா, பிரெட்லீ போன்றோரும் உபாதைக்கு உள்ளாக பிரக்கன், பிரட் வில்லியம்ஸ் முதலான புதிய வேகப்பந்து வீச்சாளர்கள் அவுஸ்ரேலிய அணிக்குள் நுழைந்ததும் இவ்வருடம் தான். அவர்களை வைத்தே ரிக்கிபொண்டிங் அருமையான வெற்றிகளையும் பெற்றார்.



மைக்கல் கிளார்க் ஆச்சரியக் குறி

விசேடமாக 35 வருட காலம் அவுஸ்ரேலியாவால் நிறைவேற்றிக் கொள்ளமுடியாமற் போனதொரு கனவை நிறைவேற்றிக் கொண்டதும் இவ்வருடம் தான். அதுவும் மார்க்வோ, ஸ்ரீவ்வோ போன்ற ஜாம்பவான்கள் இல்லாமலே ரிக்கிபொண்டிங் அந்தச் சாதனையை இந்தியாவில் வைத்து இந்தியாவைத் தோற்கடித்ததன் மூலம் சாதித்துக் கொண்டார். இதிலும் இந்த அபாரத் தொடரில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்ரேலிய அணிக்கு தலைமை தாங்கியவர் அணியின் உபதலைவர் அடம் கில்கிறிஸ்ட். பொதுவாக சமன் செய்யப்படும் தொடர்களில் இரண்டு அணிகளையும் சேர்ந்த அணித்தலைவர்கள் சோடியாக வந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வது இயல்பாகக் காணக்கூடிய காட்சி. ஆனால், இந்தியாவில் தொடரை வென்ற போது ரிக்கிபொண்டிங் - அடம் கில்கிறிஸ்ட் இருவரும் வந்து தொடரின் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற காட்சியும் இவ்வருடக் கிரிக்கெட்டின் ஒரு வித்தியாசமான காட்சி தான்.

இதேவேளை, கடந்த வருடம் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஊக்கமருந்துப் பாவனைக் குற்றச்சாட்டின் பேரில் ஒருவருட காலம் ஒதுக்கிவைக்கப்பட்ட ஷேன் வோன்- சர்வதேச கிரிக்கெட் உலகில் நுழைந்ததும் இவ்வருடத்திலே தான். அதோடு இவரோடு சரிக்குச் சரியாக சுழற்பந்து வீச்சில் மோதிக் கொண்டிருக்கும் முரளி தன்னகத்தே வைத்திருந்த சாதனையை ஷேன் வோன் முறியடித்ததும் இவ்வருடத்திலேயே. அடுத்த வருடம் இருவரில் யார் யாரைத் துரத்தித் துரத்திப் பிடிப்பாரோ என்று கூற முடியாவிட்டாலும் இந்த வருட முடிவு வரை உலகத்தின் அதிகூடிய விக்கெட்டுகளைப் பெற்றவர் என்ற சாதனையை ஷேன் வோனிடம் இருந்து பறிக்க முடியாது என்பதும் உண்மைதான்.

பொதுவாகப் பார்த்தால் இன்று சர்வதேச கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் உயர் தரம் வாய்ந்த இரண்டு அணிகளை எது வித தயக்கமும் இன்றிப் பெயரிடும் வல்லமை இந்த நிமிடத்தில் யாரிடம் இருக்கிறது என்றால் அது அவுஸ்ரேலியாவிடம் மட்டும் தான் என்று துணிந்து கூறலாம்.

அவுஸ்ரேலியாவின் இன்றைய நிலை பற்றி அவுஸ்ரேலிய கிரிக்கெட் சார்ந்தவர்கள் புகழ்ந்து கூறுவதைவிட வேறு நாட்டவர்கள் யாராவது புகழ்ந்து கூறினால் அது ஏற்கப் படக்கூடியதாக இருக்கும். அந்த வகையில் இன்று உலகின் மிகப் பலம் வாய்ந்த அணியாக விளங்கும் ஒரேஒரு அணி என்றால் அது அவுஸ்ரேலிய அணிதான் என்று, நியூசிலாந்து அணியின் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் கூறுவது மிகவும் சரியாகவும், பொருத்தமாகவும் இருக்கும் என்று துணிந்து கூறலாம்.

- ஜோசப் கிருஷ்ணா.

## சூரியன் மறைவதில்லை

போர்ட் எலிசபெத் தென்னாபிரிக்காவின் முக்கியமானதொரு நகரமாகும் என்பது தெரிந்த விடயம் தான். என்றாலும், இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர் அன்ட்ரூ ஸ்ரோஸ் பொறுத்தும் அது ஒரு முக்கியத்துவமான நகரம் தான். ஏனெனில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அன்ட்ரூ ஸ்ரோஸ் ஆட்டமிழக்காமல் நூற்றியிருபது ஓட்டங்கள் பெற்றபோது தான் பங்கு கொள்ளும் முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே தாயகத்திலும் வெளிநாட்டிலும் சதம் பெறும் சாதனை வீரர்கள் வரிசையில் இவரும் இணைந்து கொண்டார்.



அன்ரூ ஸ்ரோஸ் வற்றாத தேம்ஸ் நதி

இவரது பெயருக்குப் பின்னால் இன்னொரு சாதனையும் இப்பொழுது சேர்ந்து கொண்டுள்ளது. ஸ்ரோஸ் தென்னாபிரிக்காவுக்கு எதிராக விளையாடும் முதலாவது டெஸ்ட் போட்டி என்பது, அவரது மொத்த எண்ணிக்கையான டெஸ்ட் போட்டிகள் என்று பார்க்கையில் வெறும் எட்டாவது போட்டி மட்டுமே. இந்த எட்டுப் போட்டிகளில் மூன்று வெவ்வேறு நாடுகளுக்கு எதிரான முதலாவது ஆட்டத்திலேயே சதம் போட்டவர் என்ற பெருமையையும் இவர் பெற்றுக் கொள்கிறார். கடந்த மே மாதத்தில் சர்வதேச கிரிக்கெட் உலகினுள் புகுந்தவர் அன்ரூ ஸ்ரோஸ். இந்தச் சாதனைகளால் பிரமித்துப் போயிருக்கிறேன் என்பது உண்மை தான், ஆனால் அதையிட்டு தூக்கலாக என்னை மாற்றிக்கொள்ள நான் முயலமாட்டேன் என்கிறார் தன்னடக்கத்துடன். இதோடு இன்னொன்றையும் குறிப்பிடவிரும்புகிறார் இவர். அதாவது எனது இந்தத் திறமைக்குக் காரணமாக அமைந்தது இங்கிலாந்து தான் என்கிறார் அவர். இவர் கூறும் காரணத்துக்கும் ஒரு காரணம் இருக்கிறது.

இடது கை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இவர் முன்னதாக நியூசிலாந்து அணிக்கு எதிராக இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் 112 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டார். அடுத்து ஜுலை மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 137 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிராக சதம் போட்டிருக்கிறார்.

இவர் பிறந்தது தென்னாபிரிக்காவின் ஜோஹானஸ்பேர்க் நகரத்தில். ஆனால் இவருக்குத் தென்னாபிரிக்கா தன் தாய் நாடென்ற படிமானம் பெரிதாக இல்லை. இதற்குக் காரணம் வேறொன்றும் அல்ல. நான் ஆறுவயதிலேயே இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டேன். அதனால் தென்னாபிரிக்கா பற்றிய நினைவுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இதனால் தென்னாபிரிக்க மண்ணில் விளையாடுகிறோமே என்ற கதம்ப உணர்ச்சிகள் ஏதும் இல்லை என்பவர் இறுதியாக ஷோன் பொலக் ஒரு சராசரி மனிதன் அல்ல, அவர் ஒரு பந்து வீசும் இயந்திரம் தான் என்று புகழ்ந்து தள்ளுகின்றார்.

இங்கு ஸ்ரோஸ் போன்ற வீரர்கள் செய்யும் பணி மகத்தானது. ஒரு நேரத்தில் கேலிக்கிடமாக இருந்த இங்கிலாந்து அணி இன்று "பேசப்படும்" அணியாக மாற்றமுற்றமைக்கு இவர்கள் தான் காரணம். இருபத்தேழு வயதான அன்ட்ரூ ஸ்ரோஸ் நிறைய சாதனை கள் புரிவார் என்று எதிர்பார்க்கலாம்.

- நிர்மலன்.

## மறைக்கப்பட்ட பௌர்ணமி

றொமேஷ் கலுவிதாரண சர்வதேச டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஆனால் கிரிக்கெட் ரசிகர்களின் மத்தியில் றொமேஷ் கலுவிதாரண வஞ்சிக்கப்பட்டவர் என்ற அபிப்பிராயம் ஒன்று நிலவி வந்தது. அது பல சந்தர்ப்பங்களில் உண்மை என்பதை உணர்த்துவதாகவும் அமைந்திருந்தது. முன்னர் ஒரு தென்னிலங்கை வாசகர் றொமேஷ் மேட்டுக் குடிமகனாக இருந்திருந்தால் இன்றும் பல வசதி வாய்ப்புக்களை அனுபவித்திருப்பார் என்று கருத்துக் கூறியிருந்தார்.

றொமேஷ் பற்றி தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்றில் அவரது 13,15 வயதுக் கால பயிற்றுனர் வண. சகோதரர் நிமால் குருசிங்க FSC எழுதியுள்ள ஒரு கட்டுரையானது மனதைத் தொடுவதாக உள்ளது.



கலுவிதாரண வஞ்சிக்கப்பட்டவர்

ஒவ்வொரு தடவையும் நீ அணியில் இருந்து விலத்தி வைக்கப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்ட போது செல்வாக்காலோ, லஞ்சத்தாலோ உள்நுழையவில்லை. உன் திறமை மட்டுமே அதற்கு மூலதனமாக இருந்தது. நீ ஏறத்தாழ இருபது தடவைகளுக்கு மேல் அணியில் இருந்து நீக்கப்பட்டு உள்வாங்கப் பட்டிருக்கிறாய். தெரிவாளர்களால், பயிற்றுநர்களால் அணித்தலைவர்களால் உனக்கு நிறையவே அநீதிகள் இழைக்கப்பட்டன. ஆனால் நீ எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டாய். யார் மனதையும் புண்படும்படி நடந்து கொள்ளவில்லை. றொமேஷ் இலங்கை அணிக்காக ஆடத் தொடங்கிய காலத்தில் இருந்தே பல அநீதிகளுக்கு உட்பட்டவர் என்பவர், தொடர்ந்து 1992 இல் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அபாரமாக ஆடியவர். ஆனால் மொறட்டுவவில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட்போட்டியில் இருந்து நீக்கப்பட்டார்.(மொறட்டுவ றொமேஷின் பிறந்த ஊர்).

இன்றைய அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து ஐந்து டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து DUCK எடுத்தார்.ஆனால் அவர் கண்டு கொள்ளப்படவில்லை. இதே வேளை றொமேஷ் சிறிது தளர்வைக் காட்டும் போது உடனே மறுப்பின்றி நீக்கி விடுவார்கள். வேறு பல பிரபல்யங்கள் தளர்வுற்றபோதும் அவர்களுக்கான டெஸ்ட் இடம் நிரந்தரமாகவே இருந்தது.

இந்தப் பின்னணியிலே றொமேஷ் அணிக்குள் வந்தாலும், உளவியல் ரீதியாக மனக்கிலேசம் அடைந்தவராகவே இருந்தார். இதனால் தனது திறமையைக் காட்ட இயலாமல் சோர்ந்து போனார். வேறு நாடுகளைச் சேர்ந்த பல வீரர்கள் றொமேஷ் அபாரத் திறமை கொண்டதொரு வீரர் என்பதை எடுத்துக் காட்டியிருந்தார்கள். ஆனாலும் இறைவனால் வழங்கப்பட்ட றொமேஷின் திறமையை எல்லோரும் சேர்ந்து சாகடித்து விட்டார்கள் என்று முடிக்கிறார் அவர். உண்மையாகவே றொமேஷ் நடத்தப்பட்ட விதத்தில் பலர் நடத்தப்படவில்லை என்பதும் அதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்திருக்கலாம் என்பதும் ஒன்றும் ரகசியமல்ல.

- செந்தூரன்.

# மகளிர் மாண்மியம்



சாந்தா ரங்கசாமி மங்கையர் கண்ணி

சர்வதேச ரீதியாக விளையாட்டுத்துறையில் பெண்கள் ஆண்களுக்கு கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல என்பது நிரூபணமாகி வருவது ஒன்றும் புதிய செய்தியல்ல. ஆனால், தெற்காசிய நாடுகளில் அந்தளவு துரதிருஷ்டம் போட்டியிடும் நிலை இருக்கிறதா என்றால் - ஆண்பாலருக்கு உள்ள வசதிகள், சுதந்திரம் என்பன மட்டுப்படுத்தப்பட்டதாகத்தான் இருக்கிறது. இந்த நாடுகளின் கலாசாரப் பின்னணி மதக் கோட்பாடுகள் பெண்களைக் கட்டிப்போடுகின்றன என்பது மறுக்கப்பட முடியாதவை தான் என்றாலும், இந்திய மகளிர் கிரிக்கெட் தொடர்பான செய்திகள் இன்னொரு வகையில் வெளி வருகின்றன.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி மத்தா மாபென் ஏன், இந்திய மகளிர் அணி விரைவான வளர்ச்சியை காட்ட முடியவில்லை என்பதற்கு ஒரு காரணத்தைக் காட்டுகிறார். கிரிக்கெட் வெய்யிலில் நின்று விளையாடும் கடுமையானதொரு விளையாட்டு. இதனால் கிரிக்கெட்டில் ஈடுபடும் பெண்கள் தமது மினுமினுப்பைப் பேணிக்கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாக அவர்கள் மீது எதிர்கால வாழ்க்கையில் ஒரு தடை ஏற்படுகிறது என்கிறார். அதாவது எழில்மிகு மங்கையரையே ஆடவர் விரும்புகிறார்கள். ஆகவே, குடும்ப வாழ்க்கை எமது சமுதாயத்தின் அடிப்படையில் உள்ள நிலையில், மகளிர் கிரிக்கெட் ஆட்டத்தின் மீது நாட்டம் கொள்வது குறைவாகவே இருக்கிறது என்கிறார்.



மாலைசூடுவேனா?

தொடர்ந்து பேசும் அவர் ஆடவர் கிரிக்கெட்டில் அனுபவிக்கும் பெருமையையோ புகழையோ மகளிர் கிரிக்கெட்டில் பெற்றுக்கொள்ள முடிவதில்லை என்கிறார். 1970 களின் மத்தியில் இந்திய மகளிர் அணி மெருகுபெறத் தொடங்கியது 1997-1998 மகளிர் உலகக் கிண்ணப்போட்டிகள் இந்தியாவில் நடைபெற்றன.

இந்தியா இன்று சர்வதேச தரவரிசையில் மூன்றாவது இடத்திலே இருக்கிறது. இருந்தும் இந்திய ரசிகர்களின் ஊக்குவிப்பு எமக்கு இருப்பதில்லை. விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே ஆட்டங்களைப் பார்க்க வருகிறார்கள். இதே வேளை, ஆடவர் போட்டிகள் நடைபெறும் போது அரங்கம் நிறைந்துவிடுகிறது. இதே போன்று ஆண்கள் ஆட்டத்தின் சிறந்த வீரன் 50ஆயிரம் ரூபாவை ஊதியமாகப் பெற்றுக்கொள்கிறார். ஆனால், நாங்கள் ஆட்ட நாயகியாக தெரிவு செய்யப்படும் போது எமது பரிசு 5 ஆயிரத்தைத் தாண்டாது என்கிறார் விரக்தியாக.



கனவாகும் இல்வாழ்க்கை

முன்னாள் இந்திய மகளிர் கிரிக்கெட் அணித்தலைவி சாந்தா ரங்கசாமி தன் கருத்தாக - இந்தியாவைப் பொறுத்தவரை ஆடவர் கிரிக்கெட் விளையாட்டை விட்டால் வேறு விளையாட்டே இல்லைப் போலவே காணப்படுகிறது. அந்தளவிற்கு ஏனைய விளையாட்டுக்கள் புறக்கணிக்கப்படுவதாகவே தெரிகிறது. மேலும், இந்தியப் பெண்களைப் பொறுத்து எந்தவிளையாட்டாக இருந்தாலும் அவர்கள் நீண்ட காலம் நின்று பிடிப்பதில்லை காரணம் அவர்களது எதிர்காலத் திருமணவாழ்விற்கு அவை உந்து சக்தியாக இல்லாமல், தடைக்கல்லாக இருப்பதாகப் பெண்கள் உணர்வது தான் காரணம் என்று கூறுகிறார்.

- மக்ஸின்.

# சிந்தனை தூய்மையானது



ஸினேடின் ஸிடானே வெள்ளை மனசு

சில மாதங்களுக்கு முன் ஸ்பானியா சென்ற இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியில் இடம் பெற்ற கறுப்பின வீரர்களை ஸ்பானிய ரசிகர்கள் இனவாத ரீதியில் அவமானப்படுத்தியதாகக் கூறப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் , தற்போது பிரான்ஸின் உதைபந்தாட்ட அணித்தலைவரும் , றியல் மட்ரிட் அணியின் நட்சத்திரமுமான சினேடின் சிடானே, ஸ்பானியர்கள் இத்தகைய மனப்பாங்கு கொண்டவர்கள் அல்ல என்று கூறியிருக்கிறார். விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே அத்தகைய அநாகரிக மனப்பாங்கு கொண்டவர்களாக இருந்திருப்பார்கள்.

அதற்காக முழு நாட்டையும் குற்றம் சாட்டாதீர்கள். ஸ்பானிய தேசிய உதைபந்தாட்ட அணியின் பயிற்றுநர், ஆர்சனல் உதைபந்தாட்டக் கழகத்தின் வீரர் தியரி ஹென்றியை இனரீதியாக அவமானப்படுத்தியதையும் அவர் பெரிதுபடுத்தக்கூடாது என்று கூறுகிறார். ஆனால் , அண்மையில் நடைபெற்ற சில கழக உதைபந்தாட்டப் போட்டிகளில் வலென்சியா அணியின் வீரர் மொகமட் செசிகோ, றியல் மட்ரிட் வீரர், பிரேசிலின் நட்சத்திரம் றொபேர்டோ கார்லோஸ் போன்றவர்களும் இனவாத வசைச் சொற்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையிற்தான் சினேடின் ஸிடானே இனவாதம் பற்றி ஸ்பானிய நாட்டை விட்டுக் கொடுக்காமல் கருத்துத் தெரிவித்துள்ளார். ஸிடானே அல்ஜீரியாவில் இருந்து பிரான்சுக்கு குடிபெயர்ந்ததொரு பரம்பரையில் வந்தவர். இவர் இந்த ஒரு சிலரின் நடத்தைகள் பற்றி மிகவும் விசனப்படுகிறார். இவை சகித்துக் கொள்ள முடியாதவை என்கிறார். நானும் ஒரு வகையில் சிறு பான்மையினத் தவன் என்ற வகையில் இப்படியாக மற்றைய நாட்டவர்களை இனத்தைக் கொண்டு, நிறத்தைக் கொண்டு அவகௌரவப்படுத்துவதை வெறுக்கிறேன் என்பவர் ஒரு சிலரின் செயலுக்கு ஒரு நாட்டையே குறை கூறிவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறார்.

– வெரோனிக்கா.



றொபேர்ட்டோ கார்லொஸ் குரைப்பவர்கள் குரைக்கட்டும்

# அரங்கேறும் உண்மைகள்

மூடி மறைக்கப்பட்ட உண்மையொன்று அம்பலத்துக்கு வந்திருக்கிறது. அதுதான் முரளிதரனின் பந்து வீச்சில் எந்தவொரு தவறும் கிடையாது என அவுஸ்ரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் சேர் டொன்.பிரட்மன் 1995 ஆம் ஆண்டு வெளிப்படையாகத் தெரிவித்த கருத்து இப்போதுதான் வெளிவந்திருக்கிறது.




டொன் பிரட்மன் வார்த்தை அமிர்தம்

1995, 1998 காலப்பகுதிகளில் இலங்கை அணியினர், அவுஸ்ரேலியாவுக்குச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டிருந்தபோது அவுஸ்ரேலிய நடுவர்களான டரெல் ஹெயரும், றோஸ் எமர்ஸனும் முரளியின் பந்துவீச்சைத் தவறெனக் கூறி ஆட்சேபம் தெரிவித்திருந்தனர்.

இது குறித்து அவுஸ்ரேலியாவில் உள்ள பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஒன்று, இரண்டு சந்தர்ப்பங்களிலும் பிரட்மனிடம் அபிப்பிராயம் கேட்டிருந்தது.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் முரளிதரன் கிரிக்கெட் விதிகளுக்கு முரணாகப் பந்து வீசுவதாகக் கூறுவதை, நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று முதல் தடவையும், முரளி பந்துவீச்சில் எந்தவித தவறும் கிடையாது எனவும், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இவ்வாறான பாணியில் பந்துவீசும் வீரர்களைக் காண்பது மிக மிக அரிது என்று இரண்டாவது சந்தர்ப்பத்திலும் முரளிக்கு ஆதரவாகவே கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் பிரட்மன், முரளிதரனின் பந்துவீச்சுப் பாணி பற்றித் தெரிவித்த கருத்துக்களைச் சம்பந்தப்பட்ட பத்திரிகை, உடனடியாகப் பிரசுரிக்காது காலம் தாழ்த்தி பிரட்மன் இறந்து சுமார் 4 வருடங்களின் பின் இந்தமாத ஆரம்பத்தில்தான் பிரசுரித்துள்ளது. அந்தப் பத்திரிகை இவ்வாறு இருட்டடிப்புச் செய்ததற்கான காரணம்தான் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறதென அர்ஜுன ரணதுங்கவும் இதுகுறித்து விசனம் தெரிவித்திருந்தார். சேர் டொன்.பிரட்மன் பற்றி கிரிக்கெட் ரசிகர்களுக்குச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. டெஸ்ட் போட்டிகளில் எவருமே அசைக்க முடியாத சராசரியான 99.94 கொண்டிருப்பவர். அவுஸ்ரேலியர்களின் சொத்தாக மதிக்கப்படுபவர் அவர்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மார்க் ரெய்லர் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் 334 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதும் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார். இதற்கு அவர் – எமது நாட்டின் பெருமதிப்புக்குரிய மனிதரான பிரட்மன் பெற்ற 334 ஓட்டங்களைக் கடக்க நான் விரும்பவில்லை எனக் காரணம் கூறியிருந்தார்.

இந்தச் செயலுக்காகவே 1998 ஆம் ஆண்டின் சிறந்த அவுஸ்ரேலியராக மார்க் ரெய்லர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலியாவில் மட்டுமல்ல உலகெங்கிலுமே பிரட்மனுக்கும், பிரட்மனின் கருத்துக்களுக்கும் என்றுமே ஒரு மகத்துவமும், மரியாதையும் உண்டு. எனவே பிரட்மன் முரளிக்கு ஆதரவாகத் தெரிவித்த கருத்துக்களை அன்று வெளியிட்டிருந்தால், அதன் பின்னர் முரளியை விமர்சனம் செய்வதற்கு எந்தவொரு அவுஸ்ரேலியனாலும் முடியாது. அவ்வாறு விமர்சித்திருந்தால் அது முரளியை அவமதிப்பதாக அமையாது. மாறாக பிரட்மனை அவமதிப்பது போன்றேயாகும்.

ஒருவேளை பிரட்மன் முரளிதரனுக்கு எதிராகச் சில கருத்துக்களை முன்வைத்திருப்பின் அவற்றைத் தலைப்புச் செய்தியாக அந்தப் பத்திரிகை போட்டிருக்கும். அந்தப் பத்திரிகையும், அந்த ஒரு நோக்கத்திலேயே இரண்டு சந்தர்ப்பங்களிலும் சிலவேளை அவரை அணுகியிருக்கக்கூடும். அந்த எண்ணம் நிறைவேறவில்லையாதலால் இந்தச் செய்தியை மூடிமறைத்திருக்கலாம்.

மேலும் இந்தக் கருத்துக்களை இப்போது வெளியிட்டிருப்பதற்கான காரணமாக இன்னொன்றையும் சுட்டிக்காட்டலாம். முரளியின் தூஸ்ரா பந்து வீச்சு சர்வதேச கிரிக்கெட் சபையின் பந்து வீச்சு முறைகளுக்கு அமைவாக அமையவில்லையென I.C.C தெரிவித்திருந்தது.

முரளியின் பிறப்பிலிருந்தே காணப்பட்ட இயல்பான கைவளைவைக் கவனத்தில் எடுக்காது 10 பாகைக்கு அதிகமாக முழங்கையை வளைப்பதாகக் கூறியே I.C.C தடைவிதித்திருந்தது. ஆனாலும் இப்போது 15 பாகைக்கு முழங்கையை வளைப்பதற்கு I.C.C அனுமதித்துள்ளது. இது சென்றமாதம்தான் அறிவிக்கப்பட்டது. ஆனால் முரளிதரனின் பந்து வீச்சுப்பற்றி பிரட்மன் 1998 ஆம் ஆண்டே – சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இவ்வாறாகப் பந்து வீசும் வீரர்களைக் காண்பது மிக மிக அரிது என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் I.C.Cக்கு முன்னரே பிரட்மன் இந்தக் கருத்தைக் கூறிவிட்டார் என்று மார்தட்டிக்கொள்ளும் ஒரு நோக்கத்திலும் இதை வெளியிட்டிருக்கலாம்.

அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய உலகசாதனை இப்போது ஷேன் வோன் கையில் இருப்பதாலும் முரளியைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை வெளியிடுவதன் மூலம் அதை இன்னும் பெறுமதிக்குரியதாக ஆக்கிக்கொள்ள முடியும் என்ற காரணத்திலும் கூட இருக்கலாம்.

இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கரை பாராட்டிப் பேசியதையும், டெண்டுல்கருக்கு பிரட்மன் தனது 90 ஆவது பிறந்த தினத்துக்கு நேரடியாக அழைப்பு விடுத்ததையும் பெரிதுபடுத்திக் கௌரவித்த அவுஸ்ரேலிய ஊடகங்கள் - முரளி விடயத்தில் பிரட்மனின் கூற்றை இருட்டடிப்புச் செய்ததன் மூலம் முரளி மீது அவுஸ்ரேலியர்கள் கொண்டிருந்த வெறுப்பு இன்னொருதரம் அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

- விமலன்.



முரளிதரன் வாழையடி வாழை

விளையாட்டு அரங்கம்

# கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறையின் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கிடையிலான விசேட கலந்துரையாடல், கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி அழகியல் கலா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பசுபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

தேக்கமடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில், உடன் ஆரம்பிக்க அரசு முன்வர வேண்டும் எனவும், இதற்கு எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தீர்மானித்தனர்.

இந்த எழுச்சி ஊர்வலத்தை நடத்துவதற்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஒன்றினைய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு எழுச்சி ஊர்வலம் எதிர்வரும் 28 ஆம் திகதி பளையிலும், 29 ஆம் திகதி கண்டாவளை, பரந்தனிலும், 30 ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலும் இடம்பெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச மக்களும் எழுச்சியுடன் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டு, பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி அரசுக்கு திறந்த பதில் ஒன்றை வழங்கும் ஓர் நிகழ்வாக, அனைத்து பிரதேச மக்களையும் ஒன்றிணைத்து, கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய எழுச்சி ஊர்வலமும் இடம்பெறும் என பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்தது.

இறுதியாக கிளிநொச்சி மாவட்டத்துக்கான வெகுஜன அமைப்புக்களின் தலைவர், செயலாளர் தெரிவு நடைபெற்றது. தலைவராக அமிர்தலிங்கம், உபதலைவராக கணேசபிள்ளை, செயலாளராக பசுபதிப்பிள்ளை, உபசெயலாளராக சபாரத்தினம், பொருளாளாராக வே.மாலிசீதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன். தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன், தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான், கிளிநொச்சி மாவட்ட கல்வி கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிமனை உதவிப் பணிப்பாளர் கணேசலிங்கம், அரசசார்பற்ற இணையத் தலைவர் கணேசபிள்ளை, கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி மற்றும் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புதுமுறிப்பு குளத்தின் அணைக்கட்டில் உட்பக்கத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

புதுமுறிப்பு குளம் அண்மையில் நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது. இந்த நிலையில் குள அணைக்கட்டின் உட்பக்கச் சாய்வில் சுமார் 150 அடி நீளம் வரையில் பாரியளவில் மண் இறக்கமடைந்துள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.



இதனால் அணைக்கட்டில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக, அந்தக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் விசனமடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக இதில் கவனம் செலுத்துமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர். இந்தப் புனரமைப்பு வேலை தென்பகுதி ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிதாக 25 வீடுகள் அமைப்பு

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பிரதேசத்தில் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் கார்ப் திட்டத்தின் கீழ் உழைப்பாளரை இழந்து, மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்கள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு முதற்கட்டமாக 25 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வீடுகள் 50 வீதம் வேலை முடிவடைந்த நிலையில் உள்ளன.

# வவுனியா பஸ் நிலையப் பகுதிகளில் கழிவுப்பொருட்களுக்கென தொட்டிகள்

(வவுனியா)

வவுனியா நகரத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் நகர சபை பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகிறது. இந்தக்- கழிவுகளை எடுத்து சென்று கிராமத்தில் கொட்டுவதற்கு, கிராம மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புக்கள் கிளப்பியுள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, நகரசபை அதிகாரிகள் கழிவுகளை மக்களிடமிருந்து தரம்பிரித்து பெறும் முன்னோடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கழிவுகளைத் தரம் பிரிப்பதன் மூலம், சேதனப் பசளையாக்க முடியும் என்பதால், வவுனியா பஸ் நிலையப் பகுதியில் ஐந்து நிறங்களிலான தகர தொட்டிகள் வைக்கப்பட்டு, மக்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வெற்றிகரமான முறையில் அமுலாக்க பொதுமக்களுடைய ஒத்துழைப்பு அவசியமாகும் என, வவுனியா நகரசபை பிரதேச சுற்றாடல் அதிகாரி தனுசினி மணிவண்ணன் தெரிவித்தார்.

வவுனியா நகரத்திலிருந்து ஒரு நாளைக்கு 50 தொன்னுக்கு மேற்பட்ட கழிவுகளைச் சேகரிக்கமுடியும். ஆனால் நகரசபை தனது வளங்களைப் பயன்படுத்தி ஒரு நாளைக்கு 18 தொன் கழிவுகளையே சேகரிக்கிறது எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

கடதாசி போன்ற பொருட்கள் நீல நிறத் தொட்டிக்குள்ளும், தேங்காய், சிரட்டை உலோகப் பொருட்கள் மண்ணிறத் தொட்டிக்குள்ளும், பிளாஸ்ரிக் பொருட்கள் மஞ்சள் நிறத் தொட்டிக்குள்ளும், கண்ணாடிப் பொருட்கள் சிவப்பு நிறத் தொட்டிக்குளளும், விரைவாக உக்கக் கூடிய பொருட்கள் பச்சை நிறத் தொட்டிக்குள்ளும் போடப்படவேண்டும் எனபதே நகரசபையின் அறிவுறுத்தலாகும்.

# ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த பூங்காச் சிறார்களின் கௌரவிப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஊரக வளர்சசிப் பணியினரால் நிர்வகிக்கப்பெறும் பூங்காக்களின் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த சிறார்களின் கௌரவிப்பு நிகழ்வு- கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில் சோழர் பூங்காவில் நடைபெற்றது. இந்த நிகழ்வு சிறுவர் பூங்காவின் இணைப்பாளர் சிறிகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகப பணிப்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார். சிறுவர் கல்வி ஊட்ட மேம்பாட்டு பணியின் கொடியை பொருணமிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் மதன்ராஜ் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை சோழர் பூங்கா நிர்வாகி இசைஞானவதி நிகழ்த்தினார். சிறப்புரைகளை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் பொ.கந்தம்மான் வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி திட்ட இணைப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அரசியற்துறையின் நிதியுதவியுடன் சோழர், கலைமகள், சொக்கலிங்கம் ஆகிய பூங்காக்களின் சிறார்களின் பெயர்களில் ஆயிரம் ரூபா வீதம் சிறார் சேமிப்புக் கணக்குகள் திறக்கப்பட்டு, அதற்கான வைப்புப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் சிறுவர்களுக்கான புத்தகப்பைகளும், ஏனைய பாடசாலை உபகரணங்களும் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பூங்காச் சிறார்களின் கலை நிகழ்வுகளும், ஆசிரியர்கள், பணியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நன்றியுரையை சொக்கலிங்கம் பூங்கா நிர்வாகி நிலாமதி நிகழ்த்தினார்.

இதில் சிறார்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியா – திருநாவற்குளப் பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல்

வவுனியா - திருநாவற்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக, அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறே பின்னர் கைகலப்பாக மாறியதாகத் தெரிய வருகிறது.

இநத மோதல் சகோதரர்களுககு இடையில் ஏற்பட்டதன் காரணமாகவே, வெளிமாவட்டத்திலிருந்து வந்த நபர் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவரைத் தாக்கமுற்பட்ட போதே, இந்தப் பதற்றநிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியற்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே, வவுனியா மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

## சுவர்கள் இடிந்த நிலையில் முன்பள்ளிகள்

மன்னார் - கணேசபுரம் தேத்தாவடி, பாலியாறு ஆகிய பிரதேசங்களிலுள்ள முன்பள்ளிகள் இயங்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.

அண்மை நாட்களாகப் பெய்த தொடர்மழையால் கணேசபுரம், சோஆ கிராமம், பாலியாறு, தேத்தாவடி, மூன்றாம்பிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள முன்பள்ளிகள் மழைநீர் உட்புகுந்தமையாலும், நிலக்கசிவு ஏற்பட்டதனாலும் இந்த முன்பள்ளிகளின் சுவர்கள் இடிந்து விழுந்த நிலையில் இயங்க முடியாத நிலை காணப்படுகின்றன.

## புனரமைக்கப்படாத நிலையில் வீதி

மன்னார் - வண்ணாங்குளத்திலிருந்து வட்டக்கண்டல் வரையான வீதி புனரமைக்கபபடாமையால், இந்த வீதியால் போக்குவரத்து மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாத நிலையில் இந்த வீதியூடாக எந்தவொரு வாகனமும் பயணிக்க முடியாதுள்ளது. இதனால் நாள் ஒன்றுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பெரும்சிரமத்தின் மத்தியிலேயே பயணித்துவருகின்றனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு மாவீரரின் தந்தையால் 10 லட்சம் நிதி கையளிப்பு



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் செங்கோலின் 12 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு, நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு பளை-கோவில் வயல் பாடசாலையில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் அவரது குடும்பத்தினரால் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிப்பதற்காக 10 லட்சம் ரூபா நிதி கையளிக்கப்பட்டது.

இந்த நிதியை மேஜர் செங்கோலின் தந்தையார் பொன்னுத்துரை மாவீரர், போராளிகள் குடும்ப நல காப்பகப் பொறுப்பாளர் கு.திருக்குமரனிடம் கையளித்தார்.

மேஜர் செங்கோலின் நினைவாக புலம்பெயர்ந்து, லண்டனில் வசித்துவரும் அவரது சகோதரனான சுதா அவரது நண்பர்கள் விக்கினேஸ்வரன், க.சுதர்சன், க.சிவநேசன், சி.சுவேந்திரன், நா.நந்தகுமார், ப.சபேஸ், க.கபிலன், சோ.துஷ்யந்தன் ஆகியோரால் வழங்கப்பட்டு, இந்தப் பணம் கையளிக்கப்பட்டது.

இதைவிட ஒரு லட்சம் ரூபா நிதி நவம் அறிவுக்கூடத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்துவதற்காக மேஜர் செங்கோலின் சகோதர னின் துணைவி செல்வராணியால் நவம் அறிவுக்கூடப் போராளி அன்புக்கரசனிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கந்தம்மான், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து செங்கோலனின் பெற்றோர்கள் மேஜர் செங்கோலன் திருவுருவப்படத்துக்கு சுடரை ஏற்றி, மலர்மாலையையும் அணிவித்தனர். அடுத்து அஞ்சலி உரையை மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சனும், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் நிகழ்த்தினர்.

பளை-கோவில்வயல் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மேஜர் செங்கோலின் குடும்பத்தினரால் அண்மையில் 4 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்டத்தில் அடுத்த வாரம் மனித சங்கிலிப் போராட்டம் நடத்த ஏற்பாடு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில், தாமதமின்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்தும் முகமாக மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் வவுனியா நகரில் நடைபெறவுள்ளது.

இந்த மனித சங்கிலிப் போராட்டத்தை வவுனியாவிலுள்ள பொது அமைப்புக்கள் இணைந்து நடத்தவுள்ளன.

இந்தப் போராட்டம் - அடுத்தவார முற்பகுதியில், புதுவருடத்துக்கு முன்னர் நடைபெறவுள்ளது. இதற்காக மக்கள் ஆதரவைத் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமான மகஜர்கள் போராட்ட முடிவில் கையளிக்கப்படவுளளன. இந்தப் போராட்டத்தால் மக்களின் இயலபு வாழ்க்கையைச் சீர்குலைய மாட்டாது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இவ்வாறான போராட்டம் தென்மராட்சி பகுதியில் கடந்த திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்*
*பண்பிலன் பற்றார்க்கு இனிது.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## தேசத்துக்கு நாசத்தை ஏற்படுத்தப்போகும் அரசின் நேர்மையற்ற நிகழ்ச்சி நிரல்

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு நிரந்தரமானதும், நியாயமானதுமான தீர்வொன்றைக் காணும் முயற்சியில் இலங்கை அரச தரப்பினர் தமது உறுதியான நிலைப்பாட்டை நிரூபிப்பதில் மீண்டும் தவறியுள்ளனர் என்பதைக் கடைசியாக அவர்கள் நோர்வே ஏற்பாட்டாளர்கள் மூலமாக விடுதலைப் புலிகளிடம் கையளித்த – பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான புதிய நிகழ்ச்சி நிரல் திட்டத்தை புலிகள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று நிராகரித்துள்ளமை தெளிவாகியுள்ளது.

மூன்றாண்டுகால போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாடுகளின் அடிப்படையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இலங்கையின் பிரதான பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் தத்தம் அணுகு முறைகளை நெறிப்படுத்திய விதங்களின் தன்மைகளும், அவர்களின் அரசியல் வியூகங்களும், சமாதானப் பேச்சுக்களின் பிரதான பங்காளியான விடுதலைப் புலிகளையும் அதற்கான ஆதரவுத் தளத்தை விருப்பார்வத்துடன் வழங்கி வந்த சர்வதேச சமூகத்தையும் ஏககாலத்தில் ஏமாற்றிக் காலம் கடத்தி 'பேய்க்காட்டும்' உத்திகளையே அடித்தளமாகக் கொண்டிருந்ததை இன்று அனைத்துத் தரப்பினரும் உணர்ந்துகொள்வதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

எப்போதுமே சிங்களப் பேரினவாத ஆட்சி பீடத்தினை அலங்கரித்து மாறிமாறி அதிகாரம் செலுத்தி வந்தவர்கள் தமிழ் மக்கள் மீதான ஆதிக்கத்தையும், அவர்களின் பாரம்பரிய மண் மீதான ஆக்கிரமிப்பையும் கைவிட்டு அவர்களின் வாழ்வியல் – அரசியல் உரிமைகளை நிஜமான சகோதரத்துவ உணர்வுடன் அங்கீகரித்து கௌரவிக்கும் ஜனநாயகப் பண்பும், தார்மீக சிந்தனையும் உடையவர்களாக ஒருபோதும் இருந்தது கிடையாது.

அப்படி அவர்கள் இருந்திருப்பார்களேயானால் – இந்த மண்ணில் மூன்று தசாப்த காலம் ஆயுதப் போராட்டமே நடந்திருக்க மாட்டாது.

இன்று மிகக் கொடுமையானதும், பேரழிவை ஏற்படுத்தியதுமான அரச பயங்கரவாதத்தின் தமிழ் மக்களுக்கெதிரான தமிழர் நிலம் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் கற்பித்த துயரமானதும், கசப்பானதுமான வரலாற்றுப் பாடங்களின் அனுபவங்களிலிருந்து சிங்கள ஆட்சித் தலைமைகள் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே தொடர்ந்தும் அவர்கள் போருக்கான ஆயத்தங்களை முன்னெடுப்பதில் காட்டும் வேக – ஆர்வ – முனைப்புக்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் நாசமாகிவிட்டது. விலைவாசி உயர்ந்துகொண்டே போகும் அளவுக்கு பணவீக்கம் அதிகரித்துக் கொண்டே போகிறது. மீண்டும் போர் ஆரம்பிக்கும் அச்சம் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் இல்லாது போய்க்கொண்டிருக்கின்றன. உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சி கண்டிருப்பதால் வருமான வளங்கள் அழிந்துகொண்டு போகின்றன. சமாதான முயற்சிகளில் அரசு காட்டும் நேர்மையீனமும், உறுதியின்மையும் வெளிநாட்டுக் கடன்களின் வருகைக்கான பாதையை முற்றாகவே அடைத்துவிடும் ஆபத்தை சமிக்ஞை காட்டி நிற்கிறது.

ஆனாலும், அரசு அதையெல்லாம் புறந்தள்ளிவிட்டு தொடர்ந்தும் பேரினவாத வெறியுடன் கூடிய யுத்த சன்னதப் போக்கிலேயே மனம் லயித்துக் கிடக்கிறது.

அதனால் சமாதானப் பேச்சுக் குறித்து நேர்மையான முறைகளில் நகர்வுகளை மேற்கொள்ளவே முடியவில்லை. ஆனாலும், சமாதானம் பற்றித் தொடர்ந்து பேசுகிறது. அறிக்கை விடுகிறது. புதிய யோசனைகளைத் தெரிவிக்கிறது. ஆனால், எதிலுமே விசுவாசமாக இல்லை. எல்லாவற்றிலும் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உத்தியைக் கையாண்டு ஏமாற்ற முனைகிறது. எல்லோரையும் ஏமாளியாக்க நினைக்கிறது.

உண்மையில் சிங்களத் தலைமைகளுக்கு தேசிய நலன்மீதான அக்கறையுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆன்ம விருப்பு இருக்குமேயானால், விடுதலைப் புலிகள் சர்வதேச ஆலோசனை மற்றும் அங்கீகாரத்துடன் தயாரித்து அளித்த இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நேர்மை அவர்களுக்கு இருந்திருக்கும்.

ஆனால், யதார்த்தம் அப்படியில்லை.

ஒரு புறம் சமாதான எதிர்ப்பாளர்களை அணிசேர்த்துக்கொண்டு சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஒப்பந்தங்களை வல்லாதிக்க சக்திகளுடன் மேற்கொள்ளும் முனைப்புடன் இயங்கியபடி – போருக்கு வேண்டிய ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்து குவித்தபடி மறுபுறம் சமாதானத்துக்குத் தயாரென அறிக்கைவிடும் ஆட்சியாளரை நம்புவதென்பது ஆரோக்கியமான விடயமல்ல....

அப்படி நம்புவது சுத்தப் பைத்தியக்காரத்தனமேயாகும்.

அரசின் புதிய நிகழ்ச்சி நிரலில் எந்தப் புதுமையும் கிடையாது. அது தமிழர் தரப்பை மேலும் பைத்தியக்காரர்களாக்கும் ஏமாற்று யோசனைகளை மட்டுமே உள்ளடக்கியுள்ளது என்பதையே விடுதலைப் புலிகளின் வெளிப்படையான நிராகரிப்பு உறுதி செய்கின்றதெனலாம்.

இதனாலேயே சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசு தெளிவான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவேண்டுமென புலிகள் வெளிப்படையாகக் கோரியுள்ளனர். அதாவது சுத்துமாத்து நோக்குடன் கூடிய மயக்கம் தரும் வகையிலான நிகழ்ச்சி நிரலை தந்து காலங்கடத்துவதை விடுத்து, நேர்மையான உறுதியான தெளிவான அதேசமயம் இறுதியான தமது நிலைப்பாட்டை அரசு முன்வைக்கவேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

புலிகளின் இந்த நியாயமான கோரிக்கையை அரசு நெஞ்சுத் துணிவுடன் நிதானமாக – அதேசமயம் விசுவாசத்துடன் பரிசீலிக்க வேண்டிய இறுதிக்கட்டம் வந்துவிட்டதென்றே கூறவேண்டும். இதனை அரசு உதாசீனம் செய்யுமாயின் முழு இலங்கையையும் பேரழிவுக்குட்படுத்த அது விரும்புகிறதென்றே அர்த்தமாகும்.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# துணிச்சல் அபூர்வ நிகழ்வைச் செய்யுமா?

ஐம்பத்தாறாம் ஆண்டுக்கு முன்பிருந்ததைப்போல் எல்லா மக்களும் எந்தவித வேறுபாடுமில்லாமல் சந்தோஷமாக வாழும் சூழ்நிலை மீண்டும் நாட்டில் ஏற்படுமென்று நீர் நினைக்கிறீரா? என்று நண்பன் திடீரென்று ஒரு கேள்வி கேட்டார்.

நீர் என்ன நினைக்கிறீர் என்று அவரிடமே அவரது கேள்வியைத் திருப்பிக் கேட்டேன். நாட்டிலுள்ள எல்லா ஊடகங்களையும் மூன்று மாதங்களுக்கு மூடிவிட்டால் நாட்டில் அமைதி தானாகவே திரும்பிவரும் என்றான் நண்பன்.

நல்ல யோசனைதான். ஆனால், நடைமுறையில் செயற்பட முடியாதது என்றேன்.

1964 ஆம் ஆண்டின் இறுதியில் ஏரிக்கரைப் பத்திரிகைக்கு வாய்ப்பூட்டுப்போடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வெள்ளை அறிக்கை என்று ஒன்றும் வெளியிடப்பட்டது. ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கும் வேலை இது என்று எதிர்க்கட்சிகள் கூச்சல் போட்டன. இதன் விளைவாக சிறிமா அம்மையாரின் தலைமையில் இயங்கிவந்த அரசிலிருந்து சி.பி.டி சில்வா முதலிய சிலர் வெளியேறி, எதிர்க்கட்சிக்குப் போனார்கள். சிறிமா அம்மையாரின் ஆட்சி கவிழ்ந்தது என்றும் நினைவூட்டினேன்.

எப்படியோ பின்னர் ஏரிக்கரைப் பத்திரிகைகள் அரசுடமையாக்கப்பட்டுவிட்டனவே என்றான் நண்பன்.

'கோழியும் அவையடை புளுங்கலும்' அவையடை என்று எங்கடை ஊரில பழமொழி சொல்றவங்கள் தெரியுமெல்லே. அது மாதிரித்தான் இதுவும். எல்லாமே சிங்கள பௌத்த மேலாதிக்கமாக இருக்கும்போது ஊடகங்களோ, வேறெதுவோ அரசுடமையானாலும், தனி உடமையானாலும் எல்லாம் ஒன்றுதான் என்று நண்பன் தொடர்ந்து சொன்னான்.

1955-56 ஆம் ஆண்டுகளில் ஏரிக்கரை பத்திரிகைகள் தனியாரிடம்தான் இருந்தன. அவை பண்டார நாயக்காவின் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டனவே தவிர, இனவாதத்துக்கு எதிராகச் செயற்படவில்லை. இனவெறியை வளர்த்துவிடுவதில் அன்றைய பத்திரிகைகள் போட்டிபோட்டன.

பண்டாரநாயக்கவுக்குப் பின்னர் சிறிமா பண்டார நாயக்கவுக்கும் எதிராக ஏரிக்கரை பத்திரிகைகள் செயற்பட்டமையால்தான் அதை அரசுடமையாக்குவதற்கு இடதுசாரிகளும் சேர்ந்து குரல் கொடுத்தனர். ஏரிக்கரை பத்திரிகைகள் ஆரம்பம் முதலே இடதுசாரிகளுக்கெதிராகவே இயங்கிவந்தன. அவை அமெரிக்காவுக்கு ஆதரவான முதலாளித்துவப் பத்திரிகைகள் என்று முத்திரை குத்தப்பட்டவை.

ஏரிக்கரை பத்திரிகைகளுக்கு எதிராக அந்தச் சமயத்தில் 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' என்ற பத்திரிகை நிறுவனம் இயங்கியது. இது முதலில் வெள்ளையரால் நடத்தப்பட்டது. பின்னர் இதில் தமிழர்களே பெரும்பாலான பங்குதாரர்களாக இருந்தனர். இந்த நிறுவனத்திலிருந்து பின்னர் வெளிவந்த 'லங்காதீப' என்ற சிங்களத் தினசரி ஏரிக்கரை பத்திரிகைகளோடு விற்பனைக்காக போட்டிபோட்டு இனவெறியைப் பின்பற்றியது.

1956 இல் சிங்களம் மட்டும் மசோதாவை ஜூன் ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அன்று, நாடாளுமன்றப் படிக்கட்டுகளில் அமர்ந்து உண்ணாவிரதமிருந்து சாத்வீகப் போராட்டம் நடத்தப்போவதாக தந்தை செல்வாவும், தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் அறிவித்திருந்தனர். உண்ணாவிரதம் இருக்கப் போவதை, இவர்கள் நாடாளுமன்றத்தை உடைக்கப்போவதாக சிங்களப் பத்திரிகைகளும், ஏரிக்கரை ஆங்கில ஏடுகளும் பிரசாரம் செய்து இனவெறியைத் தூண்டிவிட்டன.

1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கெதிரான இனக் கலகத்தைத் தூண்டிவிடுவதிலும் ஏரிக்கரைப் பத்திரிகைகளே முக்கிய பங்கு வகித்தன.

1958 மேமாத இறுதியில் இனக்கலகம் தொடங்கி கொழும்பிலும் மற்றைய இடங்களிலும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டும், பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டும், தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோதும்கூட 'நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது' என்று பண்டாரநாயக்க அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்.

அக்காலத்தில் 'ரைம்ஸ்' நிறுவனத்திலிருந்து 'மோனிங் ரைம்ஸ்' என்று ஆங்கிலத்தில் காலைத்தினசரியொன்று வெளிவந்து கொண்டிருந்தது.

'எல்லாம் கட்டுப்பாட்டுக்குள்' இருக்கிறதென்று பண்டாரநாயக்க விடுத்த அறிக்கைகளுக்குப் பதிலாக மோனிங் ரைம்ஸ் ஆசிரியர் கோட்டையிலுள்ள ரைம்ஸ் கட்டடத்தின் மூன்றாவது மாடியிலிருந்து ஆசிரியர் குழுவினர் பார்த்த இனவெறிக்காட்சிகளை 'இதுதானா கட்டுப்பாட்டுக்குள் இருப்பவை' என்று முதல்பக்கத்திலேயே காரசாரமாக ஒரு தலையங்கம் தீட்டியிருந்தார்.

இதன்பின்னர்தான் நாட்டில் அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவும் போடப்பட்டது. படைகளும் சேவைக்கு அழைக்கப்பட்டன. இனவெறிக்கெதிராக 'மோனிங் ரைம்ஸ்' ஆசிரிய தலையங்கம் எழுதியதுடன் செய்திகளையும் இனவெறிக்கு சார்பாக இல்லாமல் வெளியிட்டதால், சிங்களவர்கள் அப்பத்திரிகையைப் பின்னர் பகிஷ்கரித்தனர். தமிழர்கள் பெருமைக்காக ஏரிக்கரை 'டெயிலி நியூசை'யே தொடர்ந்து வாங்கினர். இதனால் 'மோனிங் ரைம்ஸ்' நின்று போனது என்று பழைய கதைகளை நான் நினைவூட்டினேன்.

இதன்பின் 'தவச' பத்திரிகைக் குழுமம் வெளிவந்து, இனவெறியை மோசமாக்கியது. வேறு வர்த்தகப பிரச்சினையில் அது மூடப்பட்டது. இப்பொழுது 'திவயின' குழுமம் 'தி ஐலண்ட்' என்ற பத்திரிகை பழைய இனவெறிப் பத்திரிகைகளெல்லாவற்றையும் சேர்த்து நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அரச ஊடகங்கள் இனவெறிக்கு சாம்பிராணிப்புகை போட்டுக் கொண்டிருப்பதுடன் வெகு தொலைவில் மறைந்து நின்று குறிபார்த்துக் குலைக்க முனைபவர்களுக்கு ஒத்தூதிக் கொண்டுமிருக்கின்றன.

கையாலாகாதவர்களுக்கு கைகொடுத்து தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் கெடுத்துக்குட்டிச் சுவராக்கும் பணியை நம்மவர்களின் பங்களிப்புடன் அரச ஊடகங்களும்,இனவெறி ஊடகங்களும் தொடர்ந்து செய்து வருகின்றன.

தமிழ் மக்களும் இந்த ஊடகங்களுக்கு ஆதரவளிப்பது வெட்கப்படவும் வேதனைக்குரியதுமாகும்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சுயமாகச் சிந்திப்பதற்கு இந்த ஊடகங்கள் இடம்கொடுத்தால்தானே! என்று நான் சொல்லிமுடித்ததும் -

ஆனால் நாட்டில் உண்மையான உறுதியான சமாதானத்தை நிலைநாட்டுவதற்குரிய துணிச்சல் ஒரேயொருவருக்குத்தான் இருக்கிறது என்றான் நண்பன்.

தகப்பன் சேனநாயக்கா குதிரையிலிருந்து விழுந்து செத்துப்போக, சாவதற்குமுன் அவர் ஆசைப்பட்டபடி மகன் டட்லி சேனநாயக்காவை பிரதமராக்கினார் சோல்பரி பிரபு. தேர்தல் நடத்தி மக்கள் ஆணையை முறைப்படி பெற்று ஆட்சிக்கு வந்த டட்லி, தாம் நிதி அமைச்சராக்கிவைத்த ஜே.ஆர். அரிசி விலையை அதிகரித்து, நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதால், அதைத் தாக்குப்பிடிக்கமுடியாமல் அரசியல் அஞ்ஞாதவாசம் போனார் டட்லி.

1959 இல் கணவன் பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டபின் 1960 இல் ஆட்சிக்குவந்த சிறிமா பண்டாரநாயக்க ஆயுத மில்லாமல் எழுச்சி கொண்ட தமிழரை ஆயுதபலம் கொண்டு அடக்கினார். 70 இல் தமிழரின் சாத்வீக எதிர்ப்பையும் மீறி நாட்டை பௌத்த குடியரசாக்கினார். நாடற்றவர் பிரச்சினைக்குத தீர்வு கண்டார்.

மேற்சபையில் (செனட்) ஓர் ஆணும் கீழ் சபையில் மக்கள் பிரதிநிதிகள் சபை ஒரு பெண்ணும் (டட்லி) என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுமளவுக்கு சிறிமா துணிந்து செயலாற்றினார். இன்றும் சிறிமாவின் மகள் சந்திரிகாவை சிறிமாவுடனும், ரணில் விக்கிரமசிங்காவை டட்லியுடனும் அரசியல் வட்டாரங்களில் ஒப்பிட்டுப் பேசப்படுகிறதென்று நான் நினைவூட்டினேன்.

இந்த ஜே.வி.பிக்காரன்களுடன் மல்லுக்கட்டிக்கொண்டிராமல், மக்களிடம் நேராகச் சென்று தமிழ் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளை வழங்காமல், நாடு முன்னேற முடியாது என்பதை சந்திரிகா பிரசாரம் செய்தால், தமிழர் தாயகத்துக்கு இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபையல்ல, தமிழ் ஈழத்தையே கொடுப்பதானாலும் கொடுங்கள் என்று சிங்கள மக்கள் ஆணையிடப் பின்வாங்கமாட்டார்கள். இப்படி நடந்தால் அதிசயம்தான். ஆனாலும் நாடு போகிறபோக்கிலும் அம்மையார் சில இடங்களில் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்ததன் விளைவையே நாடு இன்று அனுபவித்து வருகிறதென்று பேசிவருவதும், புலிகளுக்கு உயிர்ப் பலிகொடுக்காமல் பேசித் தீர்த்தால் சமாதானத்துக்கான நோபல் பரிசையும் பெறலாமென முயற்சிப்பதும் சில அபூர்வ நிகழ்ச்சிகள் நடைபெற வழிவகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றான் நண்பன்.

*

## வாரநோக்கு...

யாழவன்

# போரின் தோல்வியே சமாதானம் மீண்டுமொரு போர் தேவையா?

பொது மக்களால் முடிந்தது எல்லாம் வெகுஜனப் போராட்டங்களை நடத்துவதும் சுலோக அட்டைகளைச் சுமப்பதுமேயாகும். ஆனால் அந்தச் சுலோக அட்டைகள் சொல்லும் உள்ளார்ந்த விடயங்களைப் புரியவேண்டியவர்கள் புரிந்துகொள்வதன் மூலமாகத் தான் மக்கள் தமது போராட்டங்களிலே வெற்றிபெற முடியும். "மீண்டும் போர் ஏற்பட்டால் பாதிக்கப்படப் போவது தமிழர்கள் மட்டுமல்ல. சிங்களவர்களும் தான" எனும் ஒரு வாசகம் அடங்கிய சுலோக அட்டை கடந்தவாரம் தென்மராட்சியிலே நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்திலே இடம் பிடித்திருந்தது. இதை அரசு அறியவேண்டியது அவசியமானதாகும்.

அரசிடமிருந்து புதிய திட்டம். விடுதலைப் புலிகள் அதற்கு மறுப்பு. புலிகளின் நிலைப்பாடு நேர்வே மூலமாக அரசுக்குத் தெரியப்படுத்தப்படும். அமெரிக்க அதிகாரிகள் குழுவொன்று குடாநாடு வருகை என ஒருபுறம். அரசு சார்ந்த இராஜதந்திர நகர்வுகள் நகர்ந்த வண்ணமிருக்க அரசின் அச



மந்தப் போக்கைக் கண்டித்து மக்கள் மனித சங்கிலிப் போராட்டம் என வாழவுரிமைக்கான நகர்வுகளும், கடந்தவாரம் நடைபெற்று அவற்றுள் சில தொடர்ந்த வண்ணமுள்ளன.

எப்படியாயினும் போரை ஆரம்பித்துவிட வேண்டும் எனும் முனைப்பிலேயே அரசும், இயன்றவரை மீண்டுமொரு போர் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் எனும் இறுக்கத்திலே விடுதலைப்புலிகளும், போர் வெடிக்காமல் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலையில் பொதுமக்களும் என, இன்று இலங்கையின் அரசியல் ஒரு மையத்திலிருந்து வேறு வேறு நிலைகளை நோக்கி இழுபட்டுக் கொண்டுள்ளது. இதற்கிடையில் சர்வதேச வல்லரசுகளும், சில இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு ஆமாம் போட்டவண்ணம் பயிற்சி முயற்சிகள், பறப்பு முயற்சிகள், புலனாய்வுப் பணிகள் என அரசுக்குக் கைகொடுத்த வண்ணமுள்ளன.

மறுபுறம் இன்னுமொரு சோகமான கதை நடந்து கொண்டிருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து, அகதிகள்போல பாடசாலைகளிலே தஞ்சம் புகுந்துள்ள நிலை. அளவுக்கு அதிகமான மழை காரணமாகப் பயிர்ச்செய்கை தொடக்கம் பரீட்சைகள்வரை எல்லாமே பாதிப்படைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரணப் பணிகள் பலராலும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. அரசும் ஏதோ உதவி செய்கிறது. ஆனால் பதிவுகள் பல முடிந்து உதவிகள் உரியவர்களை அடையும்போது கொடிய கோடை பிறந்துவிடும்.

இது இவ்வாறு இருக்க, பணமுள்ளவர்களும் வாழ முடியாதா எனும் நிலையும் கடந்தவாரம் காணப்பட்டது. பிரிமா நிறுவனத்துடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாகக் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவவே, மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பணியாரங்களின் விலைகள் கூட சடுதியாக ஏற்றப்பட்டன. அவை மட்டுமன்றி, எரிபொருளின் விலையும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களிலே பொதுமக்களை வழமையைவிட அதிகமாகக் காணக்கூடியதாகவுள்ளது. விலைவாசியேற்றம் ஒருபுறம் தானாக நிகழ்ந்து கொண்டிருக்க, அரசு அவற்றைக் கருதிச் செயற்படாது போரை ஆரம்பிக்கவே குறியாகவுள்ளது.

இதனாலேயே புதிய மொந்தையில் பழைய கள்ளை விட்டு விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. அந்தப் பழைய கள்ளோ குடிப்பதற்கு உகந்த நிலையில் இல்லாதுடன், குடித்தால் இறப்பு நிழலாகும் எனும் போக்கிலும் உள்ளது. இதனால் இதை நிராகரித்த புலிகள் தமது யோசனையை மீண்டும் நோர்வே ஊடாக அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். எப்படியாயினும் புலிகளை வைத்தே போரை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் குறியாகவுள்ள அரசு புலிகள் நிராகரிப்பார்கள் என வெளிப்படையாக அறிந்திருந்தும் அத்தகையதொரு மோசமான மாற்று யோசனையையே புலிகள் பக்கம் அனுப்பியுள்ளது.

எவ்வாறு இடைக்கால நிர்வாக வரைபுத் திட்டம் மூலமாகப் புலிகளைப் பணியவைக்க முற்பட்டதோ, அதேபோலவே மாற்று யோசனை எனும் வடிவிலும் புலிகளைப் பணியவைக்க முற்படுகிறது. அதுமட்டுமன்றி, தமது மாற்று யோசனையைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சமாதானமாகப் பேசுவதற்குத் தயாராகவில்லை. போரையே விரும்புகிறார்கள் எனப் பொய்ப் பிரசாரம் செய்வதும், அரசினுடைய நோக்கமாகவுள்ளது. ஆனால் விடு தலைப் புலிகளும் ஒவ்வொரு விடயத்தையும் மிகவும் நிதானமாகக் கையாண்டு, தமது நகர்வுகளிலே சர்வதேசம் சந்தேகம் கொள்ளாத வகையிலே தமது நிலையான சமாதான ஆவலை வெளிப்படுத்தி வருகின்றனர். விடுதலைப் புலிகளுடைய நிலைப்பாடு உறுதியானது என்பதை நன்றாக அறிந்திருந்தும், அரசு அவர்களைச் சீண்ட முனைகிறது. இதனாலேயே நியாயமாக ஏற்றுக்கொள்ளமுடியாத குருட்டு நிபந்தனைகளுடன் கூடிய தனது மாற்று யோசனைகளை முன்வைத்து வருகிறது. சர்வதேசம் ஒரு விடயத்தை இந்த வேளையில் மிகக் கவனமாகக் கையாளவேண்டிய தேவையுள்ளது. அரசு ஏதோ மாற்று யோசனையை அனுப்பியது. புலிகள் அதை நிராகரித்தார்கள் என்ற வெளியே தெரியும் செயதியை மட்டும் கவனத்தில் கொள்ளாது, அரசு எதைத் தனது யோசனையாக அனுப்பியது? ஏன் இதை விடுதலைப்புலிகள் நிராகரித்தார்கள் என்பதையும் கருத்தில் எடுக்கவேண்டும்.

தனிநாடு கோரிப் போராடிவரும் மக்கள் போராட்ட அமைப்பான விடுதலைப்புலிகள் அமைப்பு, தமது நிலைப்பாட்டைச் சற்றுத் தளர்த்தி இடைக்கால நிர்வாக அலகுவரை இறங்கிவந்துள்ள சூழலிலே மேலும் மேலும் அவர்களை இன்னும் பணியவைக்க, இறங்கிவர வைக்க எண்ணுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. சர்வதேச ஒத்துழைப்புடன் போர் மூலம் புலிகளை ஒடுக்க முனைந்து ஏற்பட்ட தோல்வியே சமாதானத்துக்கு அடிப்படையாக அமைந்தது என்பதை அரசு தெரிந்திருந்தும், மீண்டும் போரைத் தொடங்க முனைகிறது. அதனால் நியாயமான, ஒரு தேசியத் தனியினம், ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டங்களை முன்வைத்து அவர்களைச் சீண்ட முனைகிறது. இது அபத்தமானது மட்டுமன்றி, ஆபத்தானதும்கூட.

போர் மூலம் அரசு எதைச் சாதிக்க முயல்கிறது. இதுவரை சாதித்தது என்ன? சிங்கள மக்களுடைய பக்கத்திலே நின்றுகொண்டு போர் மூலம் அவர்களுக்குக் கிடைத்தது என்னவென்று ஆராய்ந்து பார்த்தால், அவர்கள்கூட தமிழர்களைப்போல போரினாலே பாதிப்படைந்தவர்களாகவே உள்ளார்கள். வயிற்றுப் பிழைப்புக்காக இராணுவத்திலே சேர்ந்து வாழ்வை இழந்தவர்களும், அதனால் விதவையான பெண்களும், அநாதையான குழந்தைகளும், பொருளாதார முதுகெலும்பை முறித்துக்கொண்ட முதலாளிகளும், வட பகுதி உற்பத்திகளுக்கு அதிகமான விலைகொடுத்த வாடிக்கையாளர்களும், சண்டைக்குப் பயந்து படையை விட்டு ஓடிய பாதாள உலகக் கும்பல்களை நடத்துவோரின் அடாவடித்தனங்களும், தமிழ் மக்களுடனான தரைவழி, இதய வழியான உறவுகள் முறிந்ததுமெனப் பல தீமையான விளைவுகளையே எதிர்கொண்டுள்ளனர்.

இதைத் தெரிந்திருந்தும் அரசு போரைத் தொடங்க முனைவதன் உத்தி, தனது அரசியலை நகர்த்திச் செல்வதற்காகவேயாகும். போருமின்றி, சமாதானமும் இன்றிப் போய்க்கொண்டிருக்கும் இந்த வேளையில் பல வழிகளிலும் தன்னைப் பலப்படுத்த அரசு முனைந்துள்ளது. இதன்படியாக இந்தியக் கடற்படையுடன் இணைத்துப் பயிற்சி முயற்சி, அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் இலங்கை விஜயம் என முழுமூச்சாக சர்வதேச ஆதரவுத் தளத்தை அகலமாக்கிக் கொண்டுள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகளின் அதிகாரிகளும் ஒரு கல்லிலே பல மாங்காய் பறிக்கக்கூடியவர்கள். தமது நாட்டின் வலுப்பிடியை இலங்கை மீது அதிகரிப்பதற்கு வரும் வழிகளையெல்லாம் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இதனாலேயே அடிக்கடி இராஜதந்திர விஜயங்களை இலங்கைக்கு மேற்கொள்கிறார்கள்.

அமெரிக்க அதிகாரிகள் அடிக்கடி வந்து போவதுதான் ஏன்? முன்னர் வந்துபோன அதிகாரிகள் ஆற்றல் குறைவானவர்களா? அவர்களது ஆலோசனைகள் நிறைவற்றன. இதனால்தான் புதிது புதிதாக அதிகாரிகள் அனுப்பிவைக்கப்படுகிறார்களா? அல்லது இலங்கையின் போர் நோயின் அளவையும், சமாதானச் சாவின் வாழ்வையும் நாடிப் பிடித்துப் பார்த்து ஊசி போடும் திட்டமா? என்பதுதான் வெளிப்படையாகத் தெரியப்படுத்தாத விடயமாகவுள்ளது. வீணே வந்து போவதற்கு அமெரிக்கா வெறும் மடையர்களல்ல. இவர்களது வருகைக்கும் குடாநாட்டுப் பொது அமைப்புகள் பலவும் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளன. இது அமெரிக்க அதிகாரிகளின் வருகைக்கான எதிர்ப்புணர்வுமட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் எதிரான உணர்வேயாகும்.

பொது மக்களால் முடிந்தது எல்லாம் வெகுஜனப் போராட்டங்களை நடத்துவதும், சுலோகஅட்டைகளைச் சுமப்பதுமேயாகும். ஆனால் அந்தச் சுலோக அட்டைகள் சொல்லும் உள்ளார்ந்த விடயங்களைப் புரியவேண்டியவர்கள் புரிந்துகொள்வதன் மூலமாகத் தான் மக்கள் தமது போராட்டங்களிலே வெற்றி பெற முடியும். "மீண்டும் போர் ஏற்பட்டால் பாதிக்கப்படப் போவது தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும்தான்" எனும் ஒரு வாசகம் அடங்கிய சுலோக அட்டை கடந்த வாரம் தென்மராட்சியிலே நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்திலே இடம் பிடித்திருநதது. இதை அரசு அறியவேண்டியது அவசியமானதாகும்.

சர்வதேச ஆதரவுத் தளத்தை அகலப்படுத்த முனையும் அரசு அதை நிலையான தளமாக்க சமாதானத்தைப் பயன்படுத்த வேண்டும். அதை விடுத்து சமாதானத்தை இழுத்தடித்துப் போரைத் தொடங்கி கைவிடப்படும் நிலையை அடையக்கூடாது. விடுதலைப்புலிகள் போரைத் தொடங்கவிரும்பவில்லையேதவிர அவர்கள் போரை நடாத்தும் வலுவற்றவர்கள் அல்லர் என்பதையும் அரசு ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். புலிகள் மீண்டும் மீண்டும் தமது சமாதான ஆவலிலே அதிக உறுதியாகவுள்ளமையால், அவர்கள் போரிடமுடியாத பலவீனமான நிலையிலேயுள்ளார்கள் எனக் கருதிவிடக் கூடாது. இவ்வாறு கருதிவிடக்கூடாது என்பதற்காகவே அவ்வப்போது தமது படைக்கட்டுமான மாற்றங்களைப் பத்திரிகைகள் வாயிலாகப் புலிகள் செய்தியாக வெளிவிடுகின்றனர். புதிய படைப்பிரிவுகளின் தோற்றமும், போராளிகளுக்கான விசேட பயிற்சி நெறிகளும், படைக்கலக் கண்காட்சிகளுமென இந்த வெளிப்படுத்துகைகள் நிகழ்ந்தவண்ணமுள்ளன. ஆட்சேர்ப்புக்கான பிரசார நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன. எனவே புலிகள் பலமாகவேயுள்ளார்கள். அத்துடன் மேலும் தம்மைப் பலப்படுத்திக் கொண்டேயுள்ளார்கள். என்பதை அரசு அறியவேண்டும். ஆனால் மக்கள் பாடுதான் திண்டாட்டம். அரசும் போருக்குத் தயாராகிறது புலிகளும் - அரசும் போரைத் தொடங்கினால் அதை எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளனர். புத்தாண்டு பிறக்கப் போகிறது.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். ஆனால் தையோடு ஏ-9 வழி மூடப் படுமா? அல்லது சமாதான வழி மலருமா? என நிறையக் கேள்விகளை நெஞ்சிலே தாங்கிய வண்ணம் பொதுமக்களும், சர்வதேச சமூகமும்....!

☆☆☆☆☆☆☆


அமரர் கவிஞர்

**தில்லைச்சிவன் அவர்கள்**

இறுதியாக எழுதிய கவிதை. இன்று 2004 – 12 – 26 அவரின்

**31 ஆம் நினைவு நாளாகும்**



### பாதை மாறலாமா?

சமுதாயக் கொடுமை கண்டு சலித்துப் போனாங்க
சாடிச்சாடிப் பேசி என்ன சாதிச்சானுங்க
அமுதான அறிவுக்கதை கட்டுரை யெலாம்
அச்சு வாகனத் தேறியென்ன கிழிச்சுப்புட்டாங்க.

மதவாத வெறிபேய்கள் கூரையைப் பருங்குது
மத்தியில வந்த மந்திரப் பேய்கள் வீடு பிதுங்குது
கதவோர வேலிக்குள்ளே காவற் பேய்க்கூட்டம்
காவிப் பட்டி ஒருகள் சிதறிக் காவற் குத்துது.

சின்னத்திரைச் சண்டித்தனம் தெருவில நடக்குது
சிறிதும் பெரிதும் ஒன்று சேர்ந்து தண்ணி அடிக்குது
பெண்ணைப் பார்த்துக் கண்ணடித்தால பாதகமா இல்லை
பிடித்திழுத்து முத்தமல்லோ குடுக்கிறான் பள்ளே.

காளைமாடு போலவல்லோ காரியம் நடக்குது
கலைத்து இளைத்துச் சாலைதோறும் சேமரியோடுது
வேலைக்கொரு மகா கொண்டா வந்து வீதி நிறைக்குது
வேகமெடுத்து முறுக்கி ஓடி விபத்து நடக்குது.

அப்பா அம்மா மகளுஞ் சின்னத் திரையைப் பார்க்கிறார்
அழகு காட்டிக் கட்டிப் புரளும் காட்சி காண்கிறார்
கப்பா போட்ட அப்பா மனசு சண்டி இழுக்குது
சுருட்டு வாங்க மகளை அனுப்பிக் கதவைச் சாத்துறார்

போதை யேறி வீதி சுற்றும் போக்கிரிக் கூட்டம்
பெண்பரசைப் பார்த்திளித்துப் போடுது ஆட்டம்
பாதை மாறிப் போகலாமா எங்கள் போராட்டம்
பார்த்திருந்தால என்னவாமெம் மாவீரர் நாட்டம்?

# ஆப்கானில் புதிய அமைச்சரவை இரு நாட்களின் முன் பதவியேற்பு



ஆப்கானின் புதிய அமைச்சரவை கடந்த வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாகப் பதவியேற்றது. இந்தப் புதிய அமைச்சரவையில் முன்னாள் போராளித் தலைவர்கள் சீர்திருத்தவாதிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

சிறுசிறு சச்சரவுகள் மற்றும் அரசியல் பேதங்களை மறந்து புதிதாகப் பதவியேற்ற அமைச்சர்கள், ஆப்கான் மக்களுக்கு சேவை புரிவார்களென தான் நம்புவதாக ஹமீட் ஹர்சாய் தெரிவித்தார்.

25 தொடக்கம் 27 வரையானோர், இஸ்லாத்தையும், ஆப்கானையும், மற்றும் நாட்டின் அரசியலமைப்பையும் பாதுகாப்போம் என குர் ஆன் மீது சத்தியப் பிரமாணம் செய்தனர்.

புதிய அமைச்சரவை பதவியேற்ற போதிலும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், நாடாளுமன்றத்தால் இவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் ஆப்கானில் தொடரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இது பிற்போடப்படலாமெனத் தெரியவருகிறது.

இந்தப் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளாதவர்கள் மீண்டுமொரு தினத்தில் தமது பதவியை ஏற்றுக்கொள்வார்கள். புதிய அமைச்சரவை பதவி ஏற்றதை ஆப்கானுக்கு உதவி வழங்கும் வெளிநாடுகள் வரவேற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இதுநாள்வரை பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் போராளித் தலைவர்களில் ஒருவரான மொகமட் பாகிம் அமைச்சரவையில் இடம் பெறவில்லை. அது போல நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட யூனுஸ் குவானுனியும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் குவானுனியை தனிக்கட்சியொன்று அமைத்து அதில் அவரை போட்டியிடுமாறு தான் கேட் டுள்ளதாகவும், அவ்வாறு அவர் போட்டியிட்டு வெற்றி பெற்றால் தான் அவரை ஆதரிப் பதாகவும், பதவியேற்பு நிகழ்வில் உரை யாற்றிய ஹர்சாய் தெரிவித்தார்.

## இராணுவ ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கி 14 பேர் பலி

இந்தோனேசியாவில் ஜகார்த்தா நகரில் இருந்து ஜாவா நோக்கிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஹெலிக்கொப்டர்திடீரென்று விழுந்து நொருங்கி தீ பிடித்துக்கொண்டதில் அதில் பயணம் செய்த 14 படையினர் பலியாகினர்.

இதில் 8 இராணுவ உயர் அதிகாரிகளும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசமான வானிலை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு கடற்படைக்கு சொந்தமான விமானம் நொருங்கி விழுந்து 4 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலியைச் சேர்ந்தவர் அடுத்த போப்பாண்டவர்?

அடுத்த போப்பாண்டவராக இத்தாலி நாட்டை சேர்ந்தவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று பெல்ஜியம் நாட்டை சேர்ந் கார்டினல் ஒருவர் கூறியுள்ளார்.'

தற்போது போப்பாண்டவராகப் போலந்து நாட்டைச் சேர்ந்த 2 ஆவது ஜோன் போல் பதவி வகித்து வருகிறார். இவருக்கு முன் போப்பாண்டவராக இருந்த முதலாவது ஜோன் போல் கடந்த 1978இல் இறந்தார். அதன்பின் இரண்டாவது ஜோன் போல் அப்பதவிக்கு வந்தார். இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்களே முன்பு போப்பாண்டவராக இருந்து வந்துள்ளனர். எனினும் 455 ஆண்டுகளாக நீடித்து வந்த இந்த நடைமுறையை தற்போதைய போப் பாண்டவர் 2ஆவது ஜோன் போல் தான் மாற்றியுள்ளார்.

இரண்டாவது ஜோன் போலுக்கு தற்போது 84 வயதாகிறது. உடல் உறுப்புக்கள் சிறிது சிறிதாக செயலிழந்து போகும் பார்கின்சன் நோயால் அவதிப்படும் இவரால் நடக்கக்கூட முடியவில்லை. எனவே அடுத்த போப் பாண்டவர் யார் என்ற பேச்சு பரவலாக எழுந்துள்ளது.

இந்நிலையில் பெல்ஜியம் நாட்டை சேர்ந்த கார்டினல் காட்பிரைட் டான்னில்ஸ் என்பவர் சமீபத்தில் ஒரு பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில் ஆசியாவைச் சேர்ந்த ஒருவரோ லத்தீன் அமெரிக்காவை சேர்ந்த ஒருவரோ போப்பாண்டவராக வருவாரா என்ற கேள்வியை 10 ஆண்டுகளுக்கு முன் கூட்டியே என்னிடம் கேட கின்றனர். நான் போப்பாண்டவராக வரவாய்ப்பில்லை. அடுத்த போப்பாண்டவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றார்.

## முஷாரப்பை கொல்ல முயன்ற படை வீரர் ஒருவருக்கு மரண தண்டனை விதிப்பு



பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷராப்பினைக் கொலை செய்ய முற்பட்டார் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட இராணுவ வீரர் ஒருவரிற்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

அதேசமயம் மற்றுமொரு இராணுவ வீரருக்கு 10 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் முஷாரப்பினைக் கொலை செய்வதற்காக ராவல் பிண்டி நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு சம்பவங்களுடன் குறிப்பிட்ட இருவருக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்து பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி ராவல் பிண்டியில் உள்ள பாலம் ஒன்றின் கீழே நேரம் கணித்து வைக்கப்பட்ட குண்டு, குறிப்பிட்ட பாலத்தினை முஷராப்பின் வாகனத் தொடரணி கடந்து சென்ற ஒரு சில நிமிடங்களில் வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்பில் இருந்து முஷாரப் மயிரிழையிற் தப்பினார்.

இந்தத் தாக்குதல் இடம் பெற்று 11 நாட்களின் பின்னர் முஷாரப்பினை இலக்கு வைத்து இரு தற்கொலைதாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த இரு சம்பவங்களும் அல்ஹெய்டா தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டதாக முஷாரப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவீரர்கள் உட்படப் பலரைக் கைதுசெய்த பொலிஸார் அவர்களை விசாரணை செய்து இருவரை, இராணுவ நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவர்கள் இருவரையும் விசாரணை செய்த இராணுவ நீதிமன்றம் ஒருவரிற்கு மரணதண்டனையும் மற்றவருக்கு 10 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்துள்ளது.




## உணவு, தண்ணீருடன் விண்கலம் புறப்பட்டது

விண்வெளியில் நிலை நிறுத்தப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றி வரும் ரஷிய விண்வெளி வீரர்கள் சலிஷான் ஷாரிப் போவ், அமெரிக்க வீரர் என்ராய் சியாகோ ஆகியோருக்கு உணவுப் பொருட்களையும், தண்ணீரையும் எடுத்துச்செல்லும் ஒரு விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

புராக்கிரஸ் எம் - 51 என்கின்ற விண்கலம் கஜகஸ்தானில் பைகானூரில் உள்ள விண்வெளி தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. இது இன்று சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணையும். எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக் முன்னாள் பிரதிப் பிரதமர் அஜீஸ் சதாமுக்கு எதிராக எந்தவித சாட்சியமும் அளிக்க மாட்டாராம்!

"ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராக சாட்சியம் அளிக்கமாட்டேன்" என்று ஈராக்கின் முன்னாள் துணைப்பிரதமர் தாரிக் அஜீஸ் கூறியுள்ளார்.

சதாம் ஹுசைனுடைய ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களாக இருந்த 12 பேரையும் அமெரிக்க இராணுவம் கைதுசெய்து சிறையில் வைத்துள்ளது. அவர்களில் தாரிக் அஜீஸும் ஒருவராவார். இவர் கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்க இராணுவத்திடம் சரணடைந்தார்.

கிறிஸ்தவரான அஜீஸ் (வயது 68) மீதான வழக்கு ஜுலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் அவரது சட்டத்தரணி பதிக் அரேப் முதன்முதலாக சிறைக்குச் சென்று அவரைச் சந்தித்து ஐந்துமணி நேரம் பேசினார்.

அப்போது சதாம் ஹுசைனுக்கு எதிராக சாட்சியம் அளிக்க மாட்டேன். அவருக்கு எதிரான எந்தச் சாட்சியமும் என்னிடமில்லை என்று தாரிக் அஜீஸ் கூறினார். இந்தத் தகவலை சட்டத்தரணி அரேப் நிருபர்களிடம் கூறினார். நாங்கள் இருவரும் பல பிரச்சினைகள் குறித்து நீண்ட நேரம் விவாதித்தோம் என்று அவர் கூறினார்.

## பெத்தலஹேம் நகரில் கிறிஸ்மஸ்தின நிகழ்வு



யேசு கிறிஸ்து பிறந்த வரலாற்றுப் பெருமைமிக்க பெத்தலஹேம் நகரில் உள்ள தேவாலயத்தில் கிறிஸ்மஸ்தின நிகழ்வுகள் பக்தி பூர்வமாகவும் வெகு விமர்சையாகவும் கொண்டாடப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாண்டுகளில் முதலாவது தடவையாக பலஸ்தீன அரசியற் தலைவர்களை பெத்தலஹேம் தேவாலயத்தில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனையிற் பங்குபற்ற இஸ்ரேல் அனுமதித்துள்ளது.

நேற்று நள்ளிரவு பெத்தலஹேம் நகரில் இடம்பெற்ற ஆராதனையில் பலஸ்தீனத்தின் புதிய ஜனாதிபதி முகமட் அப்பாஸ் மற்றும் அதிகாரசபையின் உள்ளகத் தலைவர் றவ்ஹி பற்றுச் உட்பட 5000ற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கலந்து கொண்டனர்.

பெத்தலகேம் நகரின் மங்கர் சதுக்கத்தில் அமைந்துள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனையின் போது அருளுரை வழங்கிய மதகுருவான மைக்கல் சம்பாப் இஸ்ரேலும் பலஸ்தீனமும் வன்முறைகளை ஒரு புதிய சமூகத்திற்காக கைவிட்டு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். அந்தச் சமூகத்திலே ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்தக் கூடாது. ஒருவர் மற்றொருவரால் தொழில் ரீதியாக நடத்தப்படக் கூடாது ஒருவரது சுதந்திரத்தை ஒருவர் பறிக்கக்கூடாது எனத் தெரிவித்தார்.




கிறிஸ்மஸ்தின நிகழ்வுகளிற்கு பெத்தலேஹேம் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் தமது சோதனை நடவடிக்கை களைச் சற்றுத்தளர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமானத்தை சுமக்கும் பரசூட்



நடுவானில் விமானங்கள் பறந்து கொண்டிருக்கும்போது திடீரென்று கோளாறு ஏற்பட்டால் கீழே விழுந்து நொருங்கி பலரது உயிரைப்பலி வாங்கி விடுகிறது. இதைத்தடுக்க அமெரிக்காவின் ஒரு நிறுவனம் புதிய பரசூட்டை உருவாக்கி உள்ளது.

மிக உயரத்தில் விமானத்தில் இருந்து பயணிகள் இந்த பரசூட்டை பயன்படுத்தி குதிக்க வேண்டியது இல்லை. கோளாறு ஏற்பட்டால் இந்த பரசூட் தானாக விரிந்து கொள்ளும் அந்த விமானமும் பரசூட்டில் தொங்கியபடி மெதுவாக கீழே இறங்க முடியும். இதன் மூலம் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். முதல் கட்டமாக குட்டி விமானங்களில் இதைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் யோசனைப்படி முதலில் பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும்!

## அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு முதலில் சமாதானப் பேச்சை ஆரம்பித்து பின்னர் இண்டு தரப்பும் தமக்கிடையே உள்ள வேறுபாடுகளை பேச்சுமேசையில் தீர்த்துக்கொள்ளலாமென அரசியல் அமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரான டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

கண்டியிலுள்ள டி.எஸ்.சேனநாயக்க ஞாபகார்த்த பொது நூலகத்தில் கடந்த வியாழக்கிழமை கலாநிதி என்.எம்.பெரேராவின் 100 ஆவது பிறந்ததின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை விரைவில் மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியில் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் நானும் ஈடுபட்டுள்ளோம். ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்தில் அமைச்சர்களாக உள்ள நாம் எமது கட்சிக்கொள்கைகளைப் பின்பற்றிவரும் அதேவேளை, தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டுமென்பதில் முனைப்புடன் உள்ளோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் சில ஓட்டைகள் இருந்தாலும் நாம் அதனைத் தொடர்ந்தும் பேணி வருகின்றோம். போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அளிப்பதற்காகவே விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபையை முன்வைத்து அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கோருகின்றனர். அவர்களின் இந்தக் கோரிக்கையை முழுமையாக ஏற்பதா? இல்லையா? என்பதற்கு பேச்சுவார்த்தை மேசையிலேயே தீர்வு காணப்படவேண்டும்.

அரசும் தமது முன்மொழிவை சமாதானப் பேச்சுவாத்தை மேசையில் முன்வைக்கலாம். இது இறுதித் தீர்வல்ல. அத்துடன், ஒருவரின் முன்மொழிவை மற்றயவர் ஏற்க வேண்டுமென்ற கடப்பாடு இல்லை. சகல முரண்பாடுகளும் பேச்சு மேசையிலேயே தீர்க்கப்பட வேண்டுமென நாம் நம்புகின்றோம்.

சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்டவேளை அதனை நாம் எதிர்த்ததுடன் இது நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லுமென நாம் அப்போது தெரிவித்திருந்தோம்.

இது நடந்து இன்று 17 வருடங்கள் கடந்து விட்டன. தமிழ்மொழி உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டாலும் எவ்வித மாற்றங்களும் இதில் ஏற்படவில்லை. இது கூட தமிழர்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி தற்போதைய சமாதானப் பேச்சை இறுகிய நிலைக்கு இட்டுச் செல்லக் காரணமாக இருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### புதிய....

ளிக்கக் கூடிய வகையில் அமையவில்லை என்று புலிகள் நிராகரித்துள்ள சூழலில் ஜே.வி.பியால் இந்த விசனம் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### வத்திக்கான்....

பொருட்படுத்தாமல் சிறப்புப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவ மக்களுக்கு தனது வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்ததுடன் அவர்களுக்கு ஆசியும் வழங்கினார்.

பிரார்த்தனைக்காக தேவாலயத்திற்கு வந்தவர்களை நீண்டவரிசையில் நிறுத்தி "மெட்டல்டி டெக்டர்" மூலம் சோதனையிடப்பட்ட பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர் அத்துடன் வத்திக்கான் நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# எஸ்.பியை விடுவிக்கக்கோரி விகாரையில் சத்தியாக்கிரகம் !

நீதிமன்றை அவமதிக்கும் வகையில் உரையாற்றினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவை விடுலை செய்யக் கோரி கதிர்காமத்திலுள்ள விகாரையொன்றில் எதிர்வரும் முதலாம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சத்தியாக்கிரகத்தின் பின்னர் உருகுணை கதிர்காம தேவாலயத்தில் மன்றாட்டப் பிரார்த்தனை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுவருடம் பிறக்கும் நேரத்தில் ஒரு லட்சம் மக்களை கதிர்காமம் தேவாலயத்திற்கு அழைப்பித்து எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கு வழிபாடு நடத்தப்போவதாக ஐ.தே.கட்சியின் மொனராகல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். (தே)

# திருகோணமலை துறைமுகப் பகுதியில் புலிகள் காணிகளை வாங்குகின்றனராம்!

## பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகம், மற்றும் கடற்படை முகாம்களை இலக்குவைத்து, அவற்றைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் காணிகளை வாங்கி வருவதாக தமக்கு விபரங்கள் கிடைத்துள்ளதென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது -

திருமலை துறைமுகம் மற்றும் கடற்படை முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள தனியாரதும் மற்றும் வெற்றுக் காணிகளாக உள்ளவற்றையும் புலிகள் விலைக்கு வாங்கி வருகின்றனர்.

அத்துடன் இவ்வாறான காணிகளை என்ன விலை கொடுத்து வாங்கவும் புலிகள் தயாராக உள்ளதாகவும், ஏற்கனவே இந்தப் பகுதியில் சில காணிகளை புலிகள் வாங்கியுள்ளதாகவும் தமக்கு நம்பகமாகத் தெரியவருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (தே)

# புலிகளுக்கு எதிரான கட்சிகள் பாதுகாப்புக் கோருவதற்கு முடிவு

நாட்டில் மீண்டும் யுத்தம் மூளக்கூடிய சாத்தியங்கள் உள்ளதால், தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதலைப் புலிகளுக்கெதிரான சில அரசியற் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் கடிதங்களை அனுப்பவுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்துக்கமைய இந்தக் கட்சிகளின் தலைவர்களின் பாதுகாப்பு, தற்போதுள்ளதை விட அதிகரிக்கப்படவேண்டுமென இந்தக் கட்சிகள் கோரவுள்ளன.

தற்போது விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை எதிர்கொள்வது குறித்து அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்தியா, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், நோர்வே உட்பட சகல வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் தமது பாதுகாப்புத் தொடர்பாகத் தெரியப்படுத்த இந்தக் கட்சிகளின் தலைவர்கள் சமீபத்தில் நடத்திய கலந்துரையாடலின்போது தீர்மானித்துள்ளனர்.

இதன்படி ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புளொட், ஈரோஸ், ஆனந்தசங்கரி, ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய அரசியற்கட்சிகளின் பாதுகாப்புத் தொடர்பாக அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டுமென, அவர்கள் அனுப்பத் தீர்மானித்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(தே)

# பீற்றர்சனுடன் கதிர்காமர் தொலைபேசியில் உரையாடல்

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தொலைபேசி மூலமாக கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பிய புதிய நிகழ்ச்சி நிரலை புலிகள் நிராகரித்ததைத் தொடர்ந்தே இந்த தொலைபேசி கலந்துரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதன்போது இருவருக்கும் இடையில் பேசப்பட்ட விடயங்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

# அரசுக்கு அழுத்தம்...

மக்களின் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு - விசேடமாக இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தமாக ஒரு இடைக்கால சுயாட்சி அமைப்பு அத்தியாவசியமானது, தவிர்க்க முடியாதது.

அப்படியான ஒரு அமைப்பு ஏற்பட்டால்தான் மக்களுக்கு பயன்படக் கூடியதாக இருக்கும்.

ஒரு இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்பட்டு அது முழுமையாக அமுல்படுத்தப்பட்டால்தான் இந்த நாட்டில் தற்போதுள்ள ஒற்றையாட்சிமுறை முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படும்.

இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அது அமுல்படுத்தப்படுவதன் மூலம் மகத்தான அந்த நம்பிக்கையை ஏற்படுத்தலாம். ஏனென்றால் இன்றைக்கு, இந்த இடைக்கால சுயாட்சி அமைப்பை எதிர்ப்பவர்களின் முக்கிய நோக்கமே ஒற்றையாட்சி தொடர வேண்டும் என்பதுதான்.

ஒற்றையாட்சி தொடர்வதாக இருந்தால் இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்படக்கூடாதென்பது அவர்களது திடமான நம்பிக்கை. இடைக்கால சுயாட்சி ஏற்பட்டால் அது ஒற்றையாட்சி முறைக்கு சாவுமணி அடிப்பதாக அமையும் என்பதால்தான் முக்கியமாக அதை எதிர்க்கின்றார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

A/L - 2007
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஜனவரி - 8
காலை 8 மணிக்கு
DMI
யாழ். நகர்
C/3504

நத்தார் புது புத்தாண்டை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி



I.Đ.Đ லோக்கல் இணைப்புகளுடன்
எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்,
ஒருவருட உத்தரவாதம் உண்டு.
விலை – 13 900/= மட்டும்
I.Đ.Đ ரூபா 25/= மட்டும்
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயக்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது மொபிடல் இணைப்பு.
சிறிலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்
கையிருப்பு உள்ளவரை மட்டும் உடனே விரையுங்கள்

அழைப்புக்கான வாடகை
மாதக் கட்டணம் - 150/=
வெளிச்செல்லும் அழைப்பு (பகல்) | நிமிடம் - 11/=
வெளிச்செல்லும் அழைப்பு (இரவு) | நிமிடம் - 6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் | நிமிடம் - 4/=
உள்வரும் அழைப்பு இரவு - இலவசம்

மேலதிக விபரங்களுக்கு:
பவர் செலுலர் ரேடிங்கம்பனி
Office : இல. 185 முதலாம் மாடி. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
212227070 0712399220 0777281521.

குறிப்பு:
டயலொக் மேசைத் தொலைபேசி இணைப்புடன் 12000/= மட்டும்
(C/34487)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)

# இரதோற்சவ சிறப்பிதழ் 26.12.2004

விளம்பர அனுசரணையாளர்கள்

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்
வெங்கடேஸ்வரா
125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் காலணியகம்
இல. 11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சர்வதேச தொலைத் தொடர்பகம்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021-222 2409, 021-222 2909
021-222 2315, 021-222 6190

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
காரைநகர்.

ஸ்ரீ முருகன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
இல.424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உதவி அரசாங்க அதிபரும்
பணியாளர்களும்
காரைநகர்.

சில்லறை, மொத்த வியாபாரிகள்
வேணி ஸ்ரோஸ்
இல. 165, K.K.Sவீதி, யாழ்ப்பாணம்

சகலவிதமான சைவ, அசைவ உணவுகளுக்கும்
சஞ்சயா ஹோட்டலண்ட்
இல. 414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P: 0777-144254, 021-222 6445, 1021-45915000

S.V.முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மொத்த, சில்லறை புடவை வியாபாரிகள்
ஏகாம்பரம் புடவை மாளிகை
72 (9), பெரியகடை, யாழ்ப்பாணம்.

சித்த ஆயுள் வேத மூலிகை மருந்துகள், கோவில் அபிஷேகத் திரவியங்களைப் பெற்றுக்கொள்ள
க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை ,யாழ்ப்பாணம்.

சீமாட்டி
பெரியகடை ,யாழ்ப்பாணம்.

திருமண அழைப்பிதழ்கள் மற்றும் சகலவிதமான பிரிண்டிங் வேலைகளுக்கும்
கஜ சங்கவி சென்ரர் அன்ட் பிரிண்டேர்ஸ்
இல. 237, K.K.S வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-222 7885

ஜவுளிகளின் சங்கமம்
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 41, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2063

பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்
இளவரசி சேலைச் சோலை
இல. 57, நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2503

அழகுசாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள
சிற்றி ரேட்ஸ்
இல. 64, கிராண் பஷார் வீதி, யாழ்ப்பாணம்.

# வடம் பிடிப்போம் வாரீர்!

"நமச்சிவாய வாழ்க
நாதன்றாள் வாழ்க
இமைப் பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் வாழ்க!"

சைவசமயிகள் முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபடும் சிவ பெருமானிற்கு மார்கழித் திருவாதிரை நாளிலே, காரைநகர் என்னும் அழகிய ஊரில் இன்று சௌந்தராம் பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் தேர் பவனிவர அருள்பாலித்துள்ளார். இந்த ஆலயம் மிகவும் பழைமை வாய்ந்ததும், அற்புதங்களும் அருளும் நிறைந்து விளங்குகின்றது.

**ஊர்ச்சிறப்பு :** காரைச்செடிகள் நிறைந்து காணப் பட்டதால், காரைதீவு எனப்பட்டது. 1869 ஆம் ஆண்டு அப்போதைய அரச அதிபரால் வீதி மூலம் யாழ்ப்பாணத்துடன் இணைக்கப்பெற்றது. அதுமுதல் கற்றோரும் மற்றோரும் காரைநகர் என்று வழங்கத் தலைப்பட்டனர். 1887 இல் தட்சண கைலாய நூலில் காரைநகர் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 12-09-1923 தொடக்கம் காரை நகர் என்று தபால் சேவையினர் மாற்றியமைத்தனர்.

துருவாசர் இங்கு வருகைதந்து, தவஞ்செய்து வீடுபேறு பெற்றார் என்றும், அகத்தியர் ஜாதகப்பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்தியர் ஆகாயத்தின் கண்ணே குறுகிய வடிவில் பேரொளி வீசும் பிறையை ஒப்பத் தம்மேனி வாடக் கடுந்தவம் புரிந்து, பெற்ற பேரொளி தோன்றக் காரைதீவில் வசித்தார் என்று புத்த ஜாதகப் பகுதி குறிப்பிடுகிறது. மேலும் மணிபல்லவம் என்ற தீவிற்கு மணிமேகலை அழைத்துச் செல் லப்பட்டு, புத்தபீடிகையால் அவள் தன் பிறப்புணர்ந்து, அமுதசுரபி பெற்றதும், இத்தீவே என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான பல வரலாற்றுப் பதிப்புகளைக் கொண்டுள்ள காரைநகரில் ஆழ்கடலில் செல்லும் மரக்கலங்கள், கப்பல் போன்றவற்றிற்கு வழிகாட்டும் வெளிச்சவீடு, அழகிய கசூரினா கடற்கரை அழகிய வயல்வெளிகளைக் கொண்டு, கவின்மிகு நகராய் விளங்குகிறது.

**ஆலயச்சிறப்பு :** இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் இருந்து வருகை வந்த 'தினகரன்' என்ற பெயருடைய ஆரியப் பிராமணர் ஒருவர், வீட்டுத் திண்ணைகள் தோறும் சென்று, அமர்ந்து கவிபாடி கல்வி போதித்தார். இப்போது "திண்ணைக்கவி" என்பது மருவி திண்ணைக்களி என்று வழங்கலாயிற்று.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஆண்டி என்னும் பெரியார் இலங்கைக்கு வந்து பல தலங்களையும் தரிசனம் செய்து, பின் காரை நகர் வந்தடைந்தார். இவரது கனவில் எம்பெருமான் தோன்றி 'நீயே நான், நானே நீ'. துர்வாசகிரிக்கு சமீபமாய் இருக்கின்றேன்' என்று கூறி மறைந்தார். இவர் அவ்விடத்தை அடைந்து, அந்த அரசமரத்தின்கீழ் தாம் கொணர்ந்த சூலத்தை வைத்து ஆத்மார்த்த பூசைசெய்து வாழ்ந்து வந்தார். இவரால் தோண்டப்பட்ட கேணி 'ஆண்டிக் கேணி' என்றும் இவரால் கட்டப்பட்ட ஐயனார் 'ஆண்டிக் கேணி ஐயனார்' என்றும் வழங்கப்படலாயிற்று.

காரைநகர் களபூமியைச் சேர்ந்த மரபால் உயர்ந்த மாணமுதலி வம்சத்தல் அவதரித்த 'அம்பலவிமுருகர்' என்னும் பெரியார் அக்காலத்தில் வாழ்ந்து வந்தார். அவர் கடவுள்பக்தி, தெய்வீக குணங்கள் அனைத்தும் நிறைந்தவர். ஆண்டி என்பாருடன் சேர்ந்து வாழ்ந்து தனது சொந்த நிலத்தில் தனது முயற்சியாலும், அடியார்கள் உதவியாலும் திருவருள் கைகூட ஆலயம் எடுக்க ஆரம்பித்தார். இது நடந்தது ஏறக்குறைய நூற்றி ஐம்பது வருடங்களின் முன் என்பது முதியவர்கள் கூற்று.

**உதிரம் வடிந்தது :** சிற்பி ஒருவர் ஒப்பஞ் செய்யாமல் வைத்திருந்த சிலையொன்றைக் கண்டு, அதன் அழகில் அதிசயித்து அதைத் தரும்படி வேண்டினார். அதை அவர் தரும்படி வேண்ட ஒப்பஞ் செய்துமுடித்துவிட்டுத் தருகிறேன் என்று சிற்பி கூறி, ஒப்பஞ்செய்யத் தொடங்கினார். அப்போது உதிரம் வடியவே சிற்பி அதிசயித்து உடனே அதை வழங்கிவிட்டார். இன்று ஒப்பஞ் செய்யப்படாமலே இந்தத் திருவுருவம் பூசிக்கப்பட்டுவருவதைக் காணலாம்.

**கழுத்துத் திருப்பிய ஐயர் :** அம்பலவி முருகர் காலத் தில் ஐயனாருக்குப் பூசை செய்து வந்த அந்தணர் ஒருவர் ஆசாரமின்றி கோவிலுட்புக வந்தபோது, நாகம் வழிமறுத்து நின்றதுடன், யாரோ ஒருவர் பிடரியில் அடித்ததை உணர்ந்து திரும்பிப்பார்த்தார். இவரது கழுத்து அத்துடன் ஒருபக்கம் திரும்பிவிட்டது. இவர் அன்றுமுதல் கழுத்துத் திருப்பிய ஐயர் என்றே அழைக்கப்பட்டார்.

**உப்புச சேராத நிவேதனம் :** அம்பலவி முருகர் தனது பணத்தைச் செலவு செய்தும், ஊரவர்கள் பங்குப் பொருளாகக் கொடுக்கும் நெல் முதலியவற்றைப் பெற்றும் கோவலை பரிபாலித்து வந்தார். நெல் சேர்க்கச் செல்கையில் 'முருகர் அம்மான் வயிற்றுப் பிழைப்பிற்கு வருகிறார்' என்ற ஒருவரது கூற்று அவரது காதில் விழவே, அன்றுமுதல் அவர் அரிசி உணவை உண்ணாமல் இலை, கிழங்கு வகைகளையும் உப் புப்போடாது பாகம் செய்து உண்டு வந்தார். அன்று முதல் ஐயனாருக்கும் உப்பின்றிய நிவேதனம் செய்து வந்தார். அதே வழக்கம் இன்றும் சிவன் கோவிலுக்கும் வழக்கமாகி, கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

தனது கனவிற்கண்ட குறிப்பின்படியே, சிதம்பரம் சென்று இவர் சிவலிங்கத்தையும் குறைந்த விலையில் பெற்றிருந்தார். அத்துடன் சோமாஸ்கந்த மூர்த்தத்தை வாங்குவதற்கு தனது மகனுடன் சென்றபோதே, இவரது ஆத்மாவும் பிரிந்து சென்றது. இவ்வாறான பல அற்புதச் செயல்களைத் தன்னகத்தே கொணடு திகழும் இவ்வாலயத்தில் பங்குனி, ஆடி, திருவாதிரை மாதங்களில் திருவிழாக்கள் நடைபெற்று வருடத்தில் மூன்று முறை தேர் பவனி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் தற்போதைய ஆதீன கர்த்தாக்களாக ஆ.அம்பலவிமுருகர், மு.சுந்தரலிங்கம் என்போர் ஆலயத்தை செவ்வனே வழி நடத்துகின்றனர்.

இவ்வாலயப் பெருமை ஓர் சில வார்த்தைகளில் வடிக்கவொண்ணாதது. இம்மண்ணில் பிறந்தோர் யாவரும் சிறந்த கல்விமான்களாக, சிறந்த பக்தசீலர்களாக, சிறந்த வர்த்தகர்களாக அனைத்துச் செல்வங்களும், சிறப்புகளும் அமையப்பெற்று, இலங்கை முழுவதும் மட்டுமல்ல அனைத்து நாடுகளிலும் பரந்து சிறப்புடன் வாழ்ந்தும் வருகிறார்கள். அவர்கள் தமது வாழ்வைச் சிறப்புற அமையவைத்த சுந்தரேஸ்வரப் பெருமானின் கருணையை மறவாது வருடந்தோறும் இலங்கையின் பலபாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் இன்றைய இரதோற்சவ பவனியிலும், நாளைய தீர்த்தோற்சவத்திலும் கலந்துகொள்வர். அத்தகைய அற்புதங்களும் அருளும் நிறைந்து காணப்படும் இந்த ஈழத்துச் சிதம்பரத்திற்கு ஒருமுறை வழிபாடாற்றச் சென்றால், வீடு திரும்ப வதற்கு மனம் மறுக்கும் - அத்தகைய அழகிய கடற்கரை எழில் சூழ்ந்ததும், அமைதி அலைகள் நிறைந்ததும், பக்தர்கள் மனதில், பக்தி அலைகளைப் பொங்கவைக்கும் ஆற்றல் படைத்தது.

அத்தகைய சுந்தரேஸ்வரப் பெருமான் எப்போது இரத பவனி வருவார், அவரது காட்சிகளை எப்போது நாம் கண்டு களிப்போம் என்று ஒவ்வொரு பக்தரினதும் உள்ளமும் எதிர் பார்த்த வண்ணம் உள்ளது.

"இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கை மணித்தீவின் நெற்றித் திலகமாய் ஜொலிக்கும் காரையம்பதி எம்பெருமானின் இரதபவனி வருங்காட்சி காணவாரீர்! என்றும் இம்மணித் தீவில் சாந்தி சமாதானம் நிலவ வாரீர்! நாம் அனைவரும் அணி திரண்டே வடம் பிடிப்போம்!"

**தொகுப்பு: ரஜனி பொன்னம்பலம், காரைநகர்.**

*சைவமும், தமிழும் ஓங்கி விளங்கும் காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன்கோயிலில் ஆடலே புரியும் ஆனந்தக் கூத்தன் - அம்பலவாணன் - நடராசப் பெருமான் சிவகாமசுந்தரியுடனும் ஏனைய பரிவார மூர்த்தங்களுடனும், பக்தர்கள் புடைசூழத் தேரில் பவனி வரும் காட்சி, கண்கொள்ளாக் காட்சி யாகும். "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் பனித்தசடையும்" கொண்ட நடராசப் பெருமான் தூக்கிய திருவடியுடன் ஆடி, அசைந்து தேரேறும் காட்சியைக் கண்ட பக்தர்கள் உருகுவார்கள். மெய்தான் அரும்பி விதிர்விதிர்ப்பார்கள், தைதான் தலை வைத்து கண்ணீர் ததும்புவார்கள், வெதுமபுவார் கள். உள்ளத்தை நெகிழவைக்கும் அற்புதக் கோலத்தைக் கண்ணாரக் கண்டு, போற்றி வணங்கி வடம்பிடித்து இழுத்து உய்வடைவோ மாக.*

**பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை**
தலைவர்,
காரைநகர் மணிவாசகர் அவை.
(அதிபர் காரைநகர் ஆ.தியாகராஜா ம.ம.வி)

பிரபா களஞ்சியம்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சீ.ரீ.சீ
கணனி நிலையம்
சக்கலாவோடை, காரைநகர்.

பால கணேசன் களஞ்சியம்
225, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

முருகானந்தன் ஸ்ரோர்ஸ்
219, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021-222 2519

குபேரன் களஞ்சியம்
ஏற்றுமதி, இறக்குமதி Fancy goods, Foods
இல: 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

செல்லப்பா களஞ்சியம்
பிரதான வீதி, காரைநகர்.

கோட், சூட், சர்வாணி சூட், தலைப்பாகை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள
K.S.M.திருமணசேவை
இல. 19, பஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர பெருமானின் அருள் எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.
காரை - துரித காகிதாதிகள் சேவைகள்
KQDS
காரைநகர்.
உங்கள் பிறப்பெண் (உடல் எண்) 2- மென்மை, 4- கவலை, 7- சோதனை, 8 வேதனை போன்றவற்றால் பாதிப்படைந்துள்ள அன்பர்கள் பெயர் எண்களைப் பொருத்தமாக அமைத்து பாவனை மூலம் 14 நாட்களில் முன்னேற்றகரமான மாறுதல் பலன்களைப் பெற்று சந்தோசத்துடன் வாழமுடியும். 1-மேன்மை, 3-போதனை, 5-தோழமை, 6-ரசனை, 9-சாதனை போன்றவற்றை அடையாது எதிர்மாறான பலன்களுடன் துக்கத்துடன் வாழ்பவர்களும் பெயர் எண்களை அதிர்ஷ்டகரமாக அமைத்து வாழ்க்கையில் முன்னேற்றகரமான பலன்களை அடைய முடியும். மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பலர் சிறந்த மாறு தல்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுங்கள்.
S.சிவசங்கர்
KQDS, ஆஸ்பத்திரி வீதி,
காரைநகர்.
T.P: 077-6265555

# YEAR END SPECIAL OFFER

K.K.Phone Service



ஆண்டிறுதி சிறப்புச் சலுகை

அனைத்து வகையான ஹவுசிங், பற்றறி வகைகள் கவர் வகைகளைப் பெற்றிட விரையுங்கள் K.K.Phone Service

சகலவிதமான தொலைபேசி வகைகளையும் ஒரே கூரையின்கீழ் உத்தரவாதத்துடன் பெற்றிட இன்றே விரையுங்கள்

K.K.Phone Service

K.K.Phone சேவைக்கு




அனைத்து வகைத் தொலைபேசிகளும் - லொக் உடைத்து மற்றும் பழுதுபார்த்து, உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

இல. 01 நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

K.K.போன் ஷொப்

(C/3466)


# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## வரவு செலவுத் திட்டம் – 2005

2005 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின் விபரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு மாநகரசபை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி, பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித் தல் தரப்படுகின்றது.

கலாநிதி க.குணராசா
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

(சி/3523)

# முக்கிய அறிவித்தல்

வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால், மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்
கி. பாஸ்கரன்
வ. பி. பா. ஊ. உ. கூ. சங்கம்
பரந்தன் / கிளிநொச்சி

செயலாளர்
க. சி. மணியம்
வ. பி. பா. ஊ. உ. கூ. சங்கம்
பரந்தன் / கிளிநொச்சி

(C/2895)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 1939 08 05



உதிர்வு 2003 12 26

## செபஸ்தியாம்பிள்ளை மைக்கல் ராஜா

ஓராண்டு காலம் உமைப் பிரிந்து போயிற்று...
பெரும் புகழும், பெருமனிதர் உறவுகளும்
நீர் பெற்ற பேறுகளாய் நிலைத்தே தொடர்கிறது...
யார் தான் உம் இடத்தை இட்டு நிரப்பவல்லார்?

நண்பனாய், மந்திரியாய், நல்லாசானாய்
பண்பிலே தெய்வமாய், பாசத்தின் உறைவிடமாய்
மண்புகழ் கலைஞனாய், மாண்புறு மனிதனாய்
எண்ணிலா திரு மிகு விளையாட்டு வீரனாய் ...
நின் உரு எங்கள் நினவெங்கும் வாழுதையா!

காலத்தை வென்றவனாய்
கால மெல்லாம் நீ உயிர்ப்பாய்...
கர்த்தரின் கருணையில் நீ...
கவலையின்றி நீ துயில்வாய்...

என்றும் உங்களின் நினைவுகளால்
உயிர்த்திருக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

தகவல்:
டானியல் சௌந்தரன்,
நாவாந்துறை.

(1006)


# மாபெரும் மலிவு விற்பனை



T.V. (14"-29"), Sony, Panasonic Video deck மற்றும் F.H Model மற்றும் Pioneer, Kenwood செற்அப் ரேடியோ மற்றும் Amplifier என்பன விற்பனைக்குண்டு.



சண் மல்ரி ரேட் சென்ரர்

இம்மாதம் 20ஆம் திகதி முதல் 31 வரை

150, K.K.S. Road, Jaffna.

(C/3502)

கிறீஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

24 மணி நேரமும் புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம்.



மலிவு விற்பனை

ஒட்டுமாங்கன்று, தேசி, தோடை மற்றும் கனிமரக் கன்றுகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:-

நாகம்மாஸ் பண்ணை

(வட்டு.இந்துக்கல்லூரி அருகாமை)
சித்தங்கேணி.

077-6331518
077-6654335

(3524)

## றோணியோ இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Super Fax 350 மொடல் றோணியோ இயந்திரம் மற்றும் புதிய ஒலிம்பியா ஆங்கில தட்டச்சு இயந்திரம் (28") விற்பனைக் குண்டு.

தொடர்பு:- சு மருதம்
66, மணிக்கூட்டு கோபுர வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.


## சிறு விளம்பரம்

உங்கள் கவனத்துக்கு!

யாழ்.பிரதான வீதி 262 சுற்றாடல் இடம் பெயர்வின்போது 3 கதவு அலுமாரியும் சிறிய கப்போட்டும் இடம்மாறி எனது வீட்டில் 2 வருடமாக உள்ளது.

உரித்துடையோர் 262 பிரதானவீதியில் வசிக்கும் கமலாதேவி தயாவுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்து பெற்றுக்கொள்ளவும்.

தகவல் : செ.ஸ்ரீகிருஸ்ணபாலன்

(1004)